விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
கிளை நூலகம்
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 02 ஞாயிற்றுக்கிழமை (15.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

## மாகாணங்களுக்கான அதிகார கட்டுப்பாடுகளால்

# தமிழ் மக்களை முழுமையாக முன்னேற்ற முடியவில்லை

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்தியாவில் தெரிவிப்பு



(சென்னை) மத்திய அரசாங்கத்தால் மாகாணங்களுக்கான அதிகாரங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டமையினால் தமிழ் மக்களை முழுமையாக முன்னேற்ற முடியவில்லை என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு சென்றுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)


இன்றைய தினம் வெளியாகும் சங்கு நாதம் சித்திரை புத்தாண்டு காரணமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வழமை போன்று வெளிவரும். ஆ-ர்

## ஜனாதிபதி இன்று லண்டன் பயணம்

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று லண்டன் நோக்கி பயணமாகவுள்ளார். 24☛

## விடுவிக்கப்பட்ட வலி. வடக்கில் திருடர்கள் கைவரிசை



24☛

## சதம் கண்ட தாய் ஒருவருக்கு பிறந்தநாள் விழா



(கிளிநொச்சி)

100 வயதை பூர்த்தி செய்த தாயொருவர் நேற்று பிறந்த நாளை கொண்டாடியுள்ளார். கோணாவில் பகுதியில் வாழ்ந்து வரும் இந்த தாயார் 1918-ம் ஆண்டு பிறந்துள் 23☛

### கலாசார, பாரம்பரிய அம்சங்களோடு

## சித்திரை புத்தாண்டை குடும்பத்தோடு கொண்டாடிய ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

புத்தாண்டு கொண்டாட்டங்கள் கோலாகலமாக இடம்பெற்றுவரும் வேளையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று கலாசார, பாரம்பரிய அம்சங்களோடு வருடப் பிறப்பை கொண்டாடியுள்ளார்.

குடும்பத்தாருடன் 24☛



### கடந்த 24 மணித்தியாலங்களில்

## பல்வேறு விபத்து சம்பவங்களில் 7 பேர் பலி; 197 பேர் படுகாயம்

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல பிரதேசங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் நேற்று மதியம் 12 மணி வரையிலான 24 மணித்தியாலங்களில் விபத்துக்களால், காயமடைந்த 197 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தம்கமுவ - மீரிகம வீதி மட்டக்களப்பு பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. நீர்கொழும்பு, எகலியாகொடை, வெலிமடை, மிகிந்தலை, ஹுங்கம மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட இடங்களில் விபத்துக்கள் பதிவாகியுள்ளது. (ம)

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

## அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் சித்திரை புதுவருடத்திலும் போராட்டம்

(கிளிநொச்சி)

பல்வேறு இன்னல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் போராடி வரும் தமக்கு இந்த புது வருடத்திலும் விடிவு கிடைக்கவில்லையென, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் கடத்தப்பட்டும் கையளிக்கப்பட்ட நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை கையளிக்குமாறு கோரி, கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று சனிக்கிழமை 421 நாட்களை தொட்டுள்ளது.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வந்த இரண்டா 23☛

### பொய்த்துப்போன ஜனாதிபதியின் வாக்குறுதி

## தந்தையின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்த சுதாகரனின் பிள்ளைகள்

(கொழும்பு)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான ஆனந்த சுதாகரன் இந்த புதுவருடத்தி லும் விடுவிக்கப்படாத நிலையில், அவரது பிள்ளைகள் கவலையில் தோய்ந்துள்ளனர்.

ஆனந்தசுதாகரனின் இரு பிள்ளைகளான கனிதரனும் 23☛



## விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பதுங்குகுழி கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் என்னும் இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பதுங்குகுழியொன்றை புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

10 அடி ஆழத்திற்கு அகழ்வு செய்ததன்மூலம் குறித்த 23☛

## தமிழர்கள் பண்பாடுமிக்கவர்கள் என்பதற்கு விடுதலைப் புலிகளே சிறந்த உதாரணமாகும்

### தமிழக பட்டிமன்ற பேச்சாளர் பர்வின் சுல்தானா மேற்கோள் காட்டிப் பேச்சு

(சென்னை)

தமிழர்கள் பண்பாட்டு விழுமியங்கள் கொண்டவர்கள் என்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளை மேற்கோள்காட்டி தமிழக பட்டிமன்றப் பேச்சாளர் பர்வின் சுல்தானா தனது உரையை நிகழ்த்தியுள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்திய செய்ம்மதி தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான பட்டிமன்றமொன்றிலேயே அவர் இவ்வாறு பேசியுள்ளார். 23☛



## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவுடன் நல்லாட்சி அரசாங்கம் தொடரும்

### அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் தொடரும் எனவும் ஜனாதிபதியின் விருப்பின் படியே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வருவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலா 23☛



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு வாழ்த்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

(கொழும்பு)

மலர்ந்துள்ள புத்தாண்டை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இலங்கை மக்களுக்கு வாழ்த்துச் செய்தி யொன்றை வெளியிட்டுள்ளார்.

நல்லாட்சி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நல்லிணக்கத்தின் ஊடாக இலங்கை யுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்படுவ தாக அமெரிக்க ஜனாதிபதி விடுத்துள்ள வாழ் த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு களை மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டில் மேலும் பலப்படுத்திக்கொள்ள எதிர்பார்ப்ப தாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது
# புத்தாண்டு விபத்துக்கள் 6 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 24 மணி நேர காலப் பகுதியில் வாகன விபத்துக்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்ட விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக தேசிய வைத்தியசாலையின் அவசர விபத் துப் பிரிவின் தேசிய தாதியர் பயிற்சி வழங் கும் பிரிவு அதிகாரி புஷ்பா ரம்யானி தெரிவி த்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இதன் அளவு 6 வீத அதிகரிப்பைக் காட்டுவ தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பட்டாசு விபத்தில் இம்முறை எவரும் காயமடைந்ததாக பதிவாகவில்லையென வும், பெருந்தெருக்களில் இடம்பெறும் விப த்துக்களின் எண்ணிக்கையே அதிகரித்து ள்ளதாகவும் புஷ்பா ரம்யானி மேலும் கூறி யுள்ளார். (ம)


**வாகனங்கள் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை. (3634)

**0710404978**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

**விற்பனைக்கு**

யா/நீராவியடியில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-

0716274916 (3612)

**விற்பனைக்கு**

1.டொபர்மான் (Doberman Dog)
2.கிரேட்டேன் (Great Dane)
Dogs (Young) விற்பனைக்கு.

Phone:0775586620 (3606)


# மரண அறிவித்தல்
## திருமதி தேவநாயகி குமாரவேல்



தும்பளை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் ஆத்தியடி பருத்தித் துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவநாயகி குமாரவேல் கடந்த 11.04.2018 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரவேலின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற கந்தையா-பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகளும் ஸ்ரீஸ்கந்த ராஜா (டென்மார்க்), சாரதாதேவி, திரௌபதி (லண்டன்), அமரர் இரவீந்திர நாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரோஜாதேவி, மகாதேவன், ஜெயந்திரன், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீசாந்தி, ஸ்ரீசுகந்தி, ஸ்ரீசாமந்தி, தேவந்தி, சாரங்கன், மதுவந்தி, ஸ்ரீகஜா னன், லவங்கன், பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2018) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆத்தியடி,
பருத்தித்துறை.

தகவல்:- [illegible] (SP)
077 554 5907

(C-2238)

## புத்தாண்டை முன்னிட்டு
# சிறைக் கைதிகளை சந்திக்க விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

சிங்கள-தமிழ் புத்தாண்டை முன்னிட்டு சிறைக் கைதிகளுக்கு பிரமுகர்களை சந்தி க்க நேற்று விசேட அவகாசம் வழங்கப்பட்டு ள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணி வரையில் இந்த அவகாசம் வழங்கப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய அறிவித்து ள்ளார்.

பார்வையிட வருபவர்களுக்கு உணவு களை எடுத்து வரவும் அனுமதி வழங்கப்பட்ட தாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

# இலங்கை அகதி தம்பதியினருக்கு பல மில்லியன் பவுண்ட் நட்டஈடு
## பிரித்தானிய நீதிமன்றம் உத்தரவு

(லண்டன்)

தாதியரின் கவனக் குறைவு காரணமாக இலங்கை அகதி தம்பதியினரின் குழந்தை ஒன்றுக்கு ஏற்பட்ட அநீதிக்கு நஷ்டஈடாக பல மில்லியன் பவுண்டுகளை செலுத்துமாறு பிரித்தானியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பி த்துள்ளது. நஷ்டஈடு தொகை எவ்வளவு என் பதை நீதிபதிகள் விரைவில் அறிவிக்கவுள் ளனர்

2008ஆம் ஆண்டு இலங்கையில் இரு ந்து பிரித்தானியாவுக்கு சென்ற இலங்கை அகதி தம்பதிக்கு, 2009இல் குழந்தை பிற ந்தது. அப்போது தாய்க்கு பாலூட்டல் தொட ர்பாக உரிய அறிவுரைகளை தாதியர் வழ ங்கவில்லை. குறித்த தமிழ்த் தாய்க்கு ஆங் கில அறிவு போதுமானதாக இல்லாத நிலை யில் அவரால் தாதியர் கூறிய அறிவுரை களை பின்பற்ற முடியவில்லை.

இதன்போது தாதியரும் குறித்த இல ங்கை தாய்க்கு புரியும் வகையில் செயற்பட வில்லை என்று நீதிமன்ற விசாரணையின் போது நீதிபதி தெரிவித்துள்ளார். நிலூஜன் என்ற இந்தக் குழந்தை 8 வருடங்களுக்கு முன்னர் பிறந்தது முதல் தொடர்ந்தும் அழுது கொண்டிருந்த போதும் அதனை தாதியர் கவனத்தில் கொள்ளவில்லை. தாய்க்கு ஆங் கில அறிவு புரியவில்லை என்ற காரணத்தை காட்டி தாதியர் அவருக்கு பாலூட்டல் தொட ர்பில் உரிய அறிவுரைகளை வழங்க வில்லை.

விரைவிலேயே குறித்த குழந்தையை யும் தாயையும் வைத்தியசாலை நிர்வாகம் வீட்டுக்கு செல்ல அனுமதித்தது. இந்தநிலை யில் பாலூட்டல் மற்றும் போசணைக் குறை பாடு காரணமாக குறித்த குழந்தைக்கு மூளையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று நீதி பதி தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே வைத்தியசாலை நிர்வாகம் பல மில்லியன் பவுண்ட்ஸ்களை குழந்தையின் பெற்றோருக்கு நட்டஈடாக வழங்க வேண் டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவு தொடர்பில் கருத்துரைத்துள்ள தனி யார் வைத்தியசாலையின் நிர்வாகம், தீர் ப்பை ஏற்று நட்டஈட்டை வழங்கப் போவதாக தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த சம்பவம் 2008இல் இடம்பெற்ற பின்னர் தமது வைத் தியசாலையில் மொழிபெயர்ப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் வைத்திய சாலை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (ம)

# சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண். வடகிழக்கு வீரகத்தி விநாயகர் ஆலய சதுர்த்தி விரதம் எதிர்வரும் 19.04.2018 வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகத்தை தொடர்ந்து மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என் பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும். (ம)

## வல்லப்பட்டையுடன்
# கட்டுநாயக்காவில் 4 பேர் கைது

(கொழும்பு)

94 லட்சம் ரூபாய் பெறுமதியான 119 கிலோ கிராம் வல்லப்பட்டையுடன் 4 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று காலை குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீர் கொழும்பு பிரதேசத்தினை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் குறி த்து சுங்க பிரிவு விசாரணைகளை முன்னெ டுத்துள்ளது. (ம)


**வாடகைக்கு**

சகல தளபாடங்கள், வசதிகள், உபகர ணங்களோடு அசைவ உணவகம் (Non- Veg. hotel) சங்கானையில் வாட கைக்கு உண்டு.

Phone:0759681973 (3608)

**வாடகைக்கு**

நல்லூர் கோவிலுக்கு முன் பாக வீடு வாடகைக்கு உண்டு.

Phone:0759681973 (3608)


# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
### யாழ்ப்பாணம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம் 2018

**22.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் வருடாந்த பொதுக்கூட்டமும் எதிர்வரும் 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

"எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எமது அன்னை நின்நிலம் மறவோம்"

(C-2230)

13.04.2018
யாழ்ப்பாணம்

த.சிவரூபன்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி

# கனடா நாடாளுமன்றில் பிரேரணை

(டொரன்ரோ)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக கனடா விதித்துள்ள தடைகளை நீக்குமாறு கனடா நாடாளுமன்ற உறுப்பினர் Jack McLaren Ontario கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து கனடா நாடாளுமன்றில் தனிநபர் தீர்மானம் ஒன்றை கொண்டு வந்துள்ள அவர், விடுதலைப் புலிகள் மீதான கனடா அரசின் தடையை உடனடியாக நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் கேள்வி நேரத்தின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான கனடா மத்திய அரசின் தடையை உடனடியாக நீக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், அனைத்து கட்சிகளின் ஆதரவையும் கோரியுள்ளார்.

புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக கனடா வாழ் புலம்பெயர் தமிழர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அனைத்து உறுப்பினர்கள் முன்னிலையிலும் அவர் எடுத்து கூறியுள்ளார்.

இது குறித்த பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர், "இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரம் அடைந்த நாள் முதல் தமிழ் மக்கள் அடக்குமுறையை அனுபவித்து வருகின்றனர். அந்த அடக்குமுறையை எதிர்கொள்ள 1976ம் ஆண்டு தமிழ் மக்களை பாதுகாக்கும் இராணுவ அமைப்பாக விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பை உருவாக்கினார்கள்.1983இல் உள்நாட்டு யுத்தம் தொடங்கியது. விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு வலுவான போரிடும் படையாக மாறியது.



இந்நிலையில், 2006 ஆம் ஆண்டு கனடா அரசாங்கம், இலங்கை அரசின் பொய் பரப்புரைகள் மூலம் ஈர்க்கப்பட்டு, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத பட்டியலில் இணைத்தது. இதன் விளைவு தமிழ் மக்கள் இரண்டாம் தர மக்களாக உலகின் பார்வையில் பார்க்க வைத்தது. விடுதலைப் புலிகளின் தோற்றத்திற்கு தமிழர்கள் காரணம் அல்ல.அதனை இன்று வரையிலும் சர்வதேசம் புரிந்து கொள்ளவில்லை. இலங்கை அரசே அதற்கு காரணம் என்பதை யாரும் புரிந்து கொள்ளாது, விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என கூறுவது வேதனையாக உள்ளது.

உள்நாட்டுப் போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. புலிகள் ஆயுத போரை கைவிட்டனர். புலிகள் மீண்டும் ஒரு போராடும் படையாக அணி திரளப் போவதில்லை. எனவே, விடுதலைப் புலிகளை பயங்கரவாத பட்டியலில் இனி வைத்திருக்கத் தேவையில்லை. எதற்காக விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக சித்திரிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் வேறு இனமோ அல்லது வேறு சமூகமோ கிடையாது. மாறாக அவர்கள் தமிழ் மக்களின் உடன் பிறப்புக்கள்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பை தொடர்ந்தும் பயங்கரவாதப் பட்டியலில் வைத்திருப்பது கனடாவில் தமிழர்கள் தலைக்கு மேல் தொங்கும் கறுப்பு மேகம் போன்றது. இந்த தடை தமிழ் மக்களை இரண்டாம் தர குடிமக்களாகவே அவமதிக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும்அவர்கள், தாயகத்தில் போரில் உயிர் நீத்த தங்களின் உறவினர்களையும், தியாகிகளையும்பகிரங்கமாக நினைவு கூறுவது மற்றும் அவர்களின் நினைவு அஞ்சலி செலுத்துவதையும்தடுக்கின்றது. கனடா வாழ் தமிழர்கள் மீண்டும் மதிப்புடன் வாழ வேண்டும். ஆகவே, பயங்கரவாதப் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை கனடா அரசு நீக்க வேண்டும்" என கேட்டுக் கொள்கிறேன்.

இதேவேளை, நாடாளுமன்ற கேள்வி நேரத்தின் போது , ஒண்டாரியோ குடிவரவு அமைச்சரிடம் Jack McLaren விடுதலைப் புலிகள் மீதான தடைகுறித்து பல கேள்விகளையும் எழுப்பினார்.

ஒண்டாரியோ நாடாளுமன்றத்தில் தான் சமர்ப்பித்த அறிக்கையை ஒட்டாவாவில் மத்திய அரசுக்கு நேரடியாக சமர்ப்பித்து இந்த தடையை நீக்க வேண்டுகோள் விடுக்க தன்னுடன் இணைந்து கனேடிய நாடாளுமன்றத்துக்கு வருமாறு அழைப்பும் விடுத்தார். (இ-7)

# ஐ.தே.க.-சு.க. இடையே புதிய உடன்படிக்கை

## சமரசிங்கவிடம் பொறுப்பு ஒப்படைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

தேசிய அரசாங்கத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கும் நோக்கில் இரண்டு கட்சிகளும் புதிய உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, உடன்படிக்கை குறித்த இணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பினை அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் ஒப்படைத்துள்ளார்.



தாம் வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் நாடு திரும்பியதும் இந்த உடன்படிக்கை குறித்த வரைவுத் திட்டங்கள் மேற்கொள்ள ப்படும் எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி முதல் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அது கடந்த டிசெம்பர் மாதம் வரையில் அமுலில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாராளுமன்றம் முடக்கம்; அரசின் செயற்பாடுகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற கூட்டத் தொடர் விசேட வர்த்தமானி மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதனால் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. பாராளுமன்ற கூட்டத் தொடரை முடிவுக்கு கொண்டு வந்து, புதிய பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் காலப் பகுதியில், பாராளுமன்றத்தில் எந்தவித ஆவணமும் சமர்ப்பிப்பதற்கு இல்லை.

இதேவேளை, அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அறிக்கையொன்றை விடுத்துள்ளார். பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்தி வைத்ததன் மூலம் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எந்தவித தாக்கமும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இராணுவத்தால் அதிக வருமானம்

## தளபதி மகேஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இராணுவத்தினரின்அமைதி காக்கும் பணிகளால் இலங்கை அதிகளவான வருமானத்தை ஈட்டியுள்ளதாக, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இலங்கை இராணுவத்தினர் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மேற்கொண்ட அமைதி காக்கும் பணிகளின் மூலமாக 161 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளனரெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தவகையில் குறித்த அமைதி காக்கும் பணிகளின் மூலம் மாதாந்தம் சுமார் 2.5 மில்லியன் டொலர்களை



இராணுவத்தினர் நாட்டுக்கு ஈட்டித் தருவதாகவும் வெளிநாட்டிலுள்ள இலங்கை இராணுவத்தினரின் மூலமாக அதிகளவான வருமானத்தை நாடு தற்போது பெற்று வருகின்றதெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைக்க விடமாட்டோம்

## வாசுதேவ எம்.பி. திட்டவட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு இடமளிக்கப்பட முடியாது என அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் கருத்து வெளியிடுகையில்,

தலைமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் ஐக்கிய தேசியக் கட்சி சிக்கியுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தனித்து ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் வழங்குவது நகைப்பிற்குரியது.

ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட சிறுகட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு 102 ஆசனங்களே உண்டு.

சுதந்திரக் கட்சியின் ஆதரவின்றி ஆட்சி அமைக்க வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்க வேண்டும்.

எனவே, சுதந்திரக் கட்சியின் ஆதரவு இன்றி ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆட்சி அமைக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜேசன் ரோய் காட்டடி தர்பார்

# பரபர... விறுவிறு... இறுதி ஓவரில் மும்பை இந்தியன்ஸை வீழ்த்தி முதல் வெற்றியை ருசித்தது கம்பீரின் டில்லி டேர்டெவில்ஸ்

ஜேசன் ரோய் மும்பை வான்ஹடேயில் காட்டடி தர்பாரை அரங்கேற்ற, மும்பை அணிக்கு எதிராக நேற்று நடந்த பரபரப்பான ஐபிஎல் லீக் ஆட்டத்தில் டில்லி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன், இந்த பருவகாலத்துக்கான ஐபிஎல் தொடரில் தனது வெற்றிக் கணக்கையும் ஆரம்பித்தது.

195 ஓட்டங்கள்என்ற கடினமான இலக்கை மும்பை அணி நிர்ணயித்திருந்தும், நெருக்கடி தரும் பந்துவீச்சு, விக்கெட்டுக்களை வீழ்த்துவதற்கு ஏற்ப வீரர்களை மாற்றி அமைக்காத தலைமைத்துவம் ஆகியவை தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது. நடப்பு சம்பியன் மும்பை அணிக்கு இது 3ஆவது வரிசையான தோல்வியாகும்.

நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் தலைவர் கௌதம் கம்பீர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிகது சூர்யகுமார் யாதவ், லீவிஸ் ஆரம்பம் வழங்கினர்.

கடந்த இருபோட்டிகளிலும் செய்த தவறிலிருந்து பாடம் கற்றுக்கொண்ட ரோகித சர்மா தொடக்க வீரராக களமிறங்காமல், சூரிய குமாரை களமிறக்கியது நல்ல பலன் கொடுத்தது.

தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரும் நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்கு இருவரும் 102 ஓட்டங்களை பகிர்ந்தனர்.

அதிலும் அரங்கில் அமர்ந்திருந்த 18 ஆயிரம் பள்ளிக் குழந்தைகளுக்கும் ரசிகர்களுக்கும் விருந்து அளிக்கும் வகையில் தொடக்க ஆட்டக்காரர்களின் துடுப்பாட்டம் அமைந்திருந்தது.

ஆட்டம் தொடங்கியதில் இருந்து சூரியகுமார் யாதவும் லீவிசும் டெல்லி அணி பந்துவீச்சை வெளுத்து வாங்கினர். முதல் ஓவரிலேயே யாதவ், லீவிஸ் தலா ஒரு பவுண்டரி அடித்ததால் 15 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டது.

டிரன்ட் போல்ட் வீசிய 4 ஆவது ஓவரில் யாதவ் அடுத்தடுத்து 2 பவுண்டரிகளும் லீவிஸ் ஒரு சிக்ஸரும் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினர். அடுத்து பந்துவீச வந்த நதீம், மொஹமட் ஷமி, கிறிஸ்டியன் ஆகியோரின் ஓவர்களில் சராசரியாக 13 ஓட்டங்கள் வீதம் சிக்ஸர்களும் பவுண்டரிகளும் பறந்தன.

4ஆவது ஓவரிலேயே மும்பை அணி 50 ஓட்டங்களை எட்டியது. பவர் ப்ளேயில் 84 ஓட்டங்கள் சேர்த்து டெல்லி அணிக்கு 'கிலி' ஏற்படுத்தியது. லீவிஸ், யாதவையும் பிரிக்க கம்பீர் 5 பந்துவீச்சாளர்களை பயன்படுத்தியும் முடிய வில்லை. 29 பந்துகளில் யாதவ் அரைச்சதம் அடித்தார்.

அதிரடியாக துடுப்பாட்டம் செய்து வந்த லீவிஸ் 48 ஓட்டங்களில் (28 பந்துகள்) டிவேசியா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவர் கணககில் 4 பவுண்டரிகளும் 4 சிக்ஸர்களும் அடங்கும்.

அடுத்த சில ஓவர்களில் சூரியகுமார் யாதவை வெளியேற்றினார் டிவேசியா. சூரியகுமார் 32 பந்துகளில் 53 ஓட்டங்கள் (ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள்) சேர்த்திருந்தார்.

3ஆவது விக்கெட்டுக்கு வந்த இசான் கிஷானுடன், அணித் தலைவர் ரோகித் சர்மா இணைந்தார். கிஷான் அதிரடி ஆட்டத்தில் இறங்க, ரோகித் சர்மா நிதானத்தைக் கடைப்பிடித்தார். கிஷான் தான் சந்தித்த ஒவ்வொரு ஓவர்களிலும் பவுண்டரிகளையும் சிக்ஸர்களையும் பறக்கவிட்டு வாணவேடிக்கை நிகழ்த்தினார்.

குறிப்பாக டிவேசியா வீசிய 13ஆவது ஓவரில் 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி என 16 ஓட்டங்கள், ஷமி வீசிய 15 ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள் உள்ளிட்ட 10 ஓட்டங்கள் என ஓட்டவிகிதத்தை உயர்த்தினார். இதனால், அணியின் ஓட்டஎண்ணிக்கை 200 ஓட்டங்களை தாண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதிரடியாக துடுப்பாட்டம் செய்த கிஷான் 23 பந்துகளில் 44 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் கிறிஸ்டியன் பந்துவீச்சில் 'கிளீன் போல்டானார். கிஷான் கணக்கில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கும் அடுத்த பந்தில் பொலார்ட் டக் அவுட்டில் வெளியேறினார்.

இதன் பின் மும்பை இந்தியன்ஸ் சரிவு தொடங்கியது. அடுத்தடுத்து வந்த வீரர்கள் பொறுப்பற்ற முறையில் துடுப்பெடுத்தாடியதால், 200 ஓட்டங்களுக்கு மேல் செல்ல வேண்டிய ஓட்டஎண்ணிக்கை படுத்துக்கொண்டது.

பொறுப்புடன் விளையாட வேண்டிய அணித் தலைவர் ரோகித் சர்மா 18 ஓட்டங்களில் அடுத்த சில ஓவர்களில் ஆட்டமிழந்தார். தான் இன்னும் துடுப்பாட்ட போர்ம் இல்லாமல் இருப்பதை மீண்டும் நிரூபித்தார்.

பின்வரிசை வீரர்களான குர்னல் பாண்டியா (11), ஹர்திக் பாண்டியா (2) ஏமாற்றம் அளித்தனர். தனஞ்செய 4, மார்கண்டே 4 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் மும்பை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்கள் சேர்த்தது.

டெல்லி அணித்தரப்பில் டிவேசியா, போல்ட், கிறிஸ்டியன் தலா 2 விக்கெட்டுக்களை சாய்த்தனர்.

198 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் கடினமான இலக்குடன் டெல்லி டேர்டெவில்ஸ் அணி களமிறங்கியது. ஜேசன் ரோய் - கம்பீர் ஆட்டத்தை ஆரம்பித்தனர். முதல் விக்கெட்டுக்கு இருவரும் 50 ஓட்டங்கள் சேர்த்து நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர்.

கடினமான இலக்கு என்பதை உணர்ந்த ஜேசன் - கம்பீர் ஜோடி தொடக்கத்திலே அதிரடியாக பந்துகளை சிக்ஸருக்கும் பவுண்டரிகளுக்கும் விரட்டியது. முதல் ஓவரிலேயே 10 ஓட்டங்களும் தனஞ்செய வீசிய 2ஆவது ஓவரில் ரோய் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி என 10 ஓட்டங்கள் சேர்த்தார்.

அதேபோல ஹர்திக் வீசிய 5ஆவது ஓவரில் ஜேஸன் ரோய் 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியும் கம்பீர் ஒரு பவுண்டரியும் அடித்து ஓட்டவிகிதத்தை ரொக்கெட் வேகத்துக்கு உயர்த்தினர்.

நிதானமாக துடுப்பெடுத்தாடிய கம்பீரை 15 ஓட்டங்களில் வெளியேற்றினார் முஸ்தாபிசுர் ரஹ்மான்.

2ஆவது விக்கெட்டுக்கு வந்த ரிஸப் பந்த், ஜேஸன் ரோயுடன் இணைந்தார். அவ்வப்போது ஜேஸன் ரோயும் ரிஸ்பாவும் சிக்ஸர்களையும் பவுண்டரிகளையும் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினர். எதிரணியின் பந்துவீச்சை விளாசித் தள்ளிய ஜேஸன் ராய் 27 பந்துகளில் அரைச்சதம் அடித்தார்.

மார்கண்டே வீசிய 9ஆவது ஓவரில் ஜேஸன் ரோய் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் உள்ளிட்ட 14 ஓட்டங்கள் சேர்த்தனர். தனஞ்செய வீசிய அடுத்த ஓவரில் ரிஸப் பந்த் 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி என 16 ஓட்டங்கள் சேர்த்தார். இதனால், அணியின் ஓட்டவிகிதம் சீராக உயர்ந்து வந்தது.

அரைச்சதத்தை நோக்கி முன்னேறிய ரிஸப் பந்த் 47 ஓட்டங்களில் (23 பந்துகள்) ஹர்திக் வீசிய 12ஆவது ஓவரில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். இவர் கணக்கில் 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கும். இருவரும் 2ஆவது விக்கெட்டுக்கு 69 ஓட்டங்களை சேர்த்தனர். அடுத்து வந்த அதிரடி வீரர் மக்ஸ்வெல் 13 ஓட்டங்களில் ஹர்திக்கிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

ஒருபுறம் விக்கெட்டுக்கள் வீழ்ந்தபோதிலும் மறுமுனையில் ஜேஸன் தூண் போல் நின்று துடுப்பெடுத்தாடினார். அடுத்து வந்த ஸ்ரேயாஸ் ஐயரும் ஜேஸன் ரோயுடன் இணைந்தார்.

ஸ்ரேயாஸ் ஐயர் நிதானம் காட்ட, ரோய் மற்றொரு பக்கம் மும்பையின் பந்துவீச்சை நொறுக்கி எடுத்தார். ஹர்திக் பாண்டியா, பும்ரா ஓவர்களில் சிக்ஸர்களையும் பவுண்டரிகளையும் ஜேஸன் ரோய் பறக்கவிட்டார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்டது. முஸ்தபிசுர் ரஹ்மான் பந்துவீச ஜேஸன் ரோய் எதிர்கொண்டார். முதல் இரு பந்துகளில் ஒரு சிக்ஸரும் ஒரு பவுண்டரியும் அடித்து ஆட்டத்தின் பரபரப்பைக் குறைத்தார்.

ஆனால், அடுத்த 3 பந்துகளிலும் ஓட்டம் சேர்க்காத [illegible] [illegible] விடுமோ என்ற பரபரப்பு நிலவியது.

ஆனால், கடைசிப் பந்தில் ஜேஸன் ஒரு ஓட்டம் எடுக்க டெல்லி அணி 7 விக்கெட்டுக்களால் முதல் வெற்றியை ருசித்தது.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய ஜேஸன் ரோய் 91 (53 பந்துகள், 6 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள்) ஸ்ரேயாஸ் ஐயர் 27 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பை இந்தியன்ஸ் தரப்பில் ஹர்திக் பாண்டியா 2 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.




## இந்தியன் பிறிமியர் லீக் - 2018

### இன்றைய போட்டிகள்




**பெங்களூர் VS ராஜஸ்தான்**
எம்.சின்னச்சாமி அரங்கு, பெங்களூரு.
மாலை 4.00 மணி

**சென்னை VS பஞ்சாப்**
ஐ.எஸ்.பிந்த்ரா அரங்கு, மொஹாலி.
இரவு 8.00 மணி

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் மகேஸ்வரன்

*தெல்லிப்பழை, விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகேஸ்வரன் நேற்று (14.04.2018) சனிக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும் பவித்திரா (மருந்தாளர் - நுவரெலியா பொது வைத்தியசாலை), சுமித்திரா (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் - 2ஆம் வருடம்), பிந்துஜன் (சாவ. இந்துக் கல்லூரி - 2017 வர்த்தகப் பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சலசாதேவி, மயில்வாகனம், இராஜேஸ்வரி மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் அரியபுத்திரன், தேவாம்பிகை, சிவசுப்பிரமணியம், கோணேஸ்வரி, நாகேஸ்வரி, புவனேஸ்வரி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற தனபாக்கியம் மற்றும் சுந்தரலிங்கம், பாலேந்திரா ஆகியோரின் மைத்துனரும் பீதாம்பரம், செல்வராசா, காலஞ்சென்ற செல்வரத்தினம் (RE) மற்றும் சூரியகுமாரன், சிவயோகி, சகிலா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

(3636)

தகவல்:- குடும்பத்தினர்
077 072 4471

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சிக்காலத்தில் இனவாதம் மேலோங்கியது

## மகன் நாமல் ஒப்புதல் வாக்குமூலம்

(கொழும்பு)

"மேல் மாகாண ஆளுநர் பதவியை அலவி மௌலா னாவுக்கு வழங்கி முஸ்லிம் களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கௌரவித் தார்."

மகிந்த ராஜபக்ஷவை இனவாதியாக சித்திரிக்க முயற்சிப்பவர்களுக்கு இதனை நினைவுபடுத்த விரும்புகின் றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் புதிய ஆளுநர்கள் நியமிக் கப்பட்டனர். இந்த நிலையில், இது தொடர் பில் அவர் கருத்து தெரிவிக் கும் போதே இவ்வாறு கூறி யுள்ளார். அவர் மேலும் கரு த்து தெரிவிக்கையில்,

நாட்டில்இனவாதம்இன்று, நேற்று வந்ததல்ல. அதற்கு நீண்டதொரு வரலாறு உண்டு. முன் னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இனவாதம் சற்று மேலோங் கியது.

ஆனால் இதற்கு நாம் ஒரு போதும் அங்கீ காரம் வழங்கவில்லை. கடந்த ஆட்சியில் இனவாதிகள் நின்ற வேகத் திற்கு, நாம் ஊசியளவு இடம் கொடுத்திருந்தால், நாடே சுடு காடாக மாறியிருக்கும்.

எமது ஆட்சிக்காலத்தை யும், இப்போது உள்ள அரசா ங்கத்தையும் ஒப்பிட்டு பார்க் கும்



போது, கடந்த ஆட்சியின் அருமையை புரிந்து கொள்ள முடியும். அத்துடன், தற்போது ஆளுநர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

இதில் ஒரு முஸ்லிம் ஆளு நராவது நியமிக்கப்பட்டுள்ளாரா? இந்த ஆட்சியமைந்த பிறகு எத்தனையோ தடவை கள் ஆளுநர்கள் மாறிவிட் டார்கள். ஒரு முஸ்லிம் ஆளு நராவது நியமிக்கப்பட்டுள் ளாரா?

இதேவேளை, எமது ஆட் சிக்காலத்தில் மேல் மாகாண ஆளுநராக, சகலவிதமான அதிகாரங்களுடனும் அலவி மௌலானா கடமையாற் றினார்.

இலங்கையில் உள்ள மாகாணங்களில் மேல் மாகாணம் மிக முக்கியமானது. அதற்கு நாம் முஸ்லிம் ஒருவரை ஆளுநராக நியமித்தி ருந்தமை ஊடாக இனவாத மற்ற அரசியல் நகர்வை அறிந்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வாக்களிக்கும் முறைமை குறித்து பவ்ரல் அமைப்பால் மாநாடு

(கொழும்பு)

எதிர்வரும்மாகாண சபைத் தேர்தலில், வாக்களிக்கும் முறைமை குறித்து கலந்து ரையாடல்களை மேற்கொள்ள அனைத்து கட்சி மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



பவ்ரல் அமைப்பினால் குறி த்த மாநாடு எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. பவ்ரல் அமை ப்பின் நிர்வாக இயக்குநர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலை வர் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளதாகவும் அவர் தெரிவித் தார். (இ-7)

## புத்தாண்டில் தந்தையை அடித்துக்கொன்ற மகன்

(காலி)

காலி, மஹமோதர பகுதி யில்மகன்ஒருவன்தந்தையை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று நண்பகல் இரு வருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உச்சமடை யவே இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் பலத்த காய மடைந்த அவர் கராபிட்டிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார்.

மஹமோதர பகுதியை சேர்ந்த 53 வயதுடைய ஒரு வரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர் பில் சந்தேக நபரான மகனை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

பிரதேசவாசிகளால் தாக் கப்பட்ட மகனை பொலிஸ் பாதுகாப்புடன் கராபிட் டிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்த னர். (இ-7)

## இலங்கைக்கு மாத்திரம் வரப்பிரசாதம்! வடமாகாண ஆளுநர் கூரே வாழ்த்து

(கொழும்பு)

வடக்கிலும் தெற்கிலும் இரு இன மக்களும் ஒரே நேரத்தில் கொண்டாடும் பண்டிகையாக தமிழ் சிங்கள புதுவருடம் அமைந்துள்ளது. இது இந்த நாட்டிற்கு மாத்திரம் கிடைத்துள்ள வரப்பிரசாதம் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜி னோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் வெளியிட் டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ் விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கும் ஒற்றுமைக் கும் இந்த புதுவருடம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததெனக் குறிப்பிட்டுள்ள ரெஜினோல்ட் கூரே, அமைதி மற்றும் செழிப்புடன் புதிய எதிர்பார்ப்பையும் இந்த கொண்டாட்டம் ஏற்படுத்து மென சுட்டிக்காட்டியுள்ளார்.



வடக்கையும் தெற்கையும் இணைக்கும் இவ்வாறான கலாசாரம் பழக்கவழக்கங்களை அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும், எமது கலாசார முக்கியத்துவம் குறித்து அவர்களும் கற்றுக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் வட க்கு ஆளுநர் மேலும் தெரி வித்துள்ளார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

பிற்போடல்

கிளிநொச்சி ஆனந்தபுரம் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு 14.04.2018 நேற்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் மேற்படி சீட்டிழுப்பு எதிர்வரும் 15.07.2018 நடைபெறவுள்ளது. (சி-2236)

தகவல்,
ஆலய நிர்வாகம்

தேவை

யா/கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. (3615)

தொடர்புகளுக்கு: 077 5007960

## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம்<br>பின்னிரவு 4.48இற்கு<br>மேட-சந் | | |
| சனி, செவ் | | குரு | |

**15.04.2018**

சித்திரை 02, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 8.37 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.27 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**மேடம்** — கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** — பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்** — நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியத்தில் வெற்றி பெறுவீர்கள்.

**கடகம்** — கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** — நடப்பதெல்லாம் நன்மைக்கே யென நினைக்கவேண்டிய நாள், எடுத்த காரியங்களில் இடையூறுகள் ஏற்படலாம், திடீர் மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கன்னி** — பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்** — பொது வாழ்வில் புகழ் கூடும், போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தேகநலன் சீராகும்.

**விருச்சிகம்** — புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் அதிக அக்கறை காட்டும் எண்ணம் உருவாகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**தனுசு** — உறவினர்களிடேயே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வழிபாடு சிறப்பினைத் தரும்.


**கும்பம்** — வருமானம் திருப்தி தரும், மனையில் மங்கள நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** — நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வரவு வந்தாலும் அதற்கேற்ப விரயங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







விளம்பி புத்தாண்டு தினமான நேற்று நல்லூர்க் கந்தன் வள்ளி தெய்வானை சமேதராக வீதி வலம் வந்து அருள் பாலித்தார். ஏராளமான பக்த அடியார் கள் விசேட பூஜை நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

(படங்கள்: ஐ.சிவசாந்தன், உ.சாளின்)

# தொண்டராசிரியர்களுக்கு முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டராசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் மத்திய கல்வி அமைச்சில் நடைபெறவிருப்பதால் அதற்கான நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றவர்களும் கிடைக்கப் பெறாதவர்களும் நாளை 16/04/2018 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரியகுளம்புதியஉயர்கலைக் கல்லூரி பிரதான மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்வதுடன் நேர்முகத் தேர்வுக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றவர்களுக்கு சத்தியக்கூற்று எழுதும் முறை தொடர்பாக மத்திய கல்வியமைச்சுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனை தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கும் அனைவரையும் ஒன்றுகூடுமாறு சங்கத் தலைவர் அறிவித்தல் விடுத்துள்ளார். (இ




# முதியோருக்கான விழிப்புணர்வும் உணவுப் பொதி வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

புதிய சோனக தெரு முதியோர் சங்க உறுப்பினர்களுக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆறுகால் மடம் கலையரங்க முன்றலில் உடல் உள ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு பற்றி யாழ். பிரதேச செயலகப் உளவளத் துணையாளர் திருமதி பெனட் சிறி சாந்தி உரையாற்றுவார்.

இந்நிகழ்வில் முதியோர்களுக்கான உணவுப் பொதிகளை யாழ்.பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் வழங்குவர். (இ)

# நடைபாதை வியாபாரத்திற்குத் தடை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதியோரங்களில் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நடைபாதை வியாபாரங்கள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் த.நடனேந்திரன் அறிவித்துள்ளார். (இ)


# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)


மாவை கலட்டி பிராங்கினி ஸ்ரீபராசக்தி அம்மன் கோவில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும். தொடர்ந்து எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 12ஆம் நாள் உற்சவம் இடம்பெற்று மறுநாள் திங்கட்கிழமை சங்காபிஷேகமும் செவ்வாய்க் கிழமை வைரவர் பொங்கல் உற்சவமும் இடம்பெறும். (இ)

❖❖❖❖❖❖❖

அச்சுவேலி வடக்கு (சர சாளி) சித்திர வேலாயுதர் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர்வரும் வியாழ க்கிழமை காலை 9 மணி யளவில் ஆரம்பமாகும். தொட ர்ந்து 8 நாட்கள் பூசை வழி பாடு இடம்பெற்று எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக் கிழமை சப்பறத் திருவிழா வும் மறுநாள் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் ஞாயி ற்று கிழமை தீர்த்தோற்சவ திரு விழாவும் இடம்பெறும். (இ)








யா/புற்றளை மகா வித்தியாலயத்தில் சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் உன்னத தொடர்பாடல் அங்குரார்ப்பணமும் ஆரம்பக் கல்வி கற்றல் வளநிலைய திறப்பு விழாவும் அண்மையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வருகை தந்த கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், த.குருகுலராஜா, த.தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





*வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் தலைமைக் காரியாலயத்தில் வட மாகாண சபை உறுப்பினர் சிவயோகன், தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க செயலகம், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட பனங்களி உற்பத்தி நிலையம் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கலந்து கொண்டார். இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.*

# விசேட ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் "புதுவருடத்திற்கான ஆசிரிய ஒன்று கூடல் நாளை திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வைரவர் கோவில் பூசையுடன் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு ஆசிரியர் ஓய்வறையில் நடைபெறும்.

ஆசிரியர்கள் மற்றும் ஆளணியினர் அனைவரும் தவறாது [illegible] தருமாறு கல்லூரி [illegible] அறிவித்துள்ளார். (இ)

# புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டின் தமிழ்-சிங்கள புதுவருடப் பிறப்பை ஒட்டிய புத்தாண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறும்.

மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவரும், தென்மராட்சி கல்வி வலயத்தின் பணிப்பாளருமான சு. சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரபல கவிஞரும் "வளரி" கவிதை இதழின் ஆசிரியருமான அருணா சுந்தரராசன் கலந்து சிறப்பிப்பார். பல்வேறு விசேட கலை நிகழ்வுகளும் இடம் பெறும். கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

# பாதுகாப்புத் துறையினரின் மோ.சைக்கிள்கள் விபத்து

## பொலிஸ் உத்தியோகத்தர் காயம்



(யாழ்ப்பாணம்)

பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளும் இராணுவ சிப்பாய் ஒருவரின் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளான சம்பவமொன்று நேற்று காங்கேசன் துறை மாவிட்டபுரம் அரசடியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து இரு இராணுவத்தினர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மாவிட்டபுரம் நோக்கிச் சென்ற பொலிஸார் ஒருவரின் மோட்டார் சைக்கிளுமே விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பவ இடத்திற்கு வந்த காங்கேசன் துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இராணுவ சிப்பாய் மற்றும் பொலிஸாரது மோட்டார் சைக்கிள்கள் இரண்டையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இதேவேளை விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்காக கேள்வி அறிவித்தல்

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்வி பிணைப்பணம் செல்லுபடியாகும்காலம் |
|---|---|---|---|---|
| KOC/DAD/06/MI/03/137-ONUR04 | புளியம்பொக்கணை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட தண்ணிப் பண்ணை குளம் புனரமைத்தல். | 2.608643 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 | ரூபா 26000 வங்கி பிணை 08.08.2018 வரை |
| KOC/DAD/06/MI/06/137-ONUR05 | பூநகரி கமநல சேவைகள் நிலையத்திற் குட்பட்ட வான்பிடிகுளம் புனரமைத்தல் | 3.70586785 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 | ரூபா 37000 வங்கி பிணை 08.08.2018 வரை |
| KOC/DAD/06/MI/06/137-ONUR06 | பூநகரி கமநல சேவைகள் நிலையத்திற் குட்பட்ட கொட்டிமோட்டை குளம் புனரமைத்தல். | 1.967902.66 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C9 | ரூபா 20000 வங்கி பிணை 22.07.2018 வரை |

**1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகோருவதற்கு தகுதியுடையவராவர்.**

i. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ii. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

iii. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக் கூடாது.

**2.** ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல: 021 228 5904, பக்ஸ் இல: 021 228 5904)

**3.** கேள்வி ஆவணங்களை 16.04.2018 ஆம் திகதியிலிருந்து 07.05.2018 ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**4.** இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**5.** அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 08.05.2018 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

**6.** கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

**7.** தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**8.** குறித்த வேலைகளுக்கான முதற் கூட்டம் (Pre Bid Meeting) 25.04.2018 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சியில் நடைபெறும்.

வே.ஆயகுலன்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி மாவட்டம்.

(சி-2224)


## சன் ஹோமியோபதி மெடிக்கல் சென்டர்

### யாழ். மண்ணில் வெற்றிகரமான ஓராண்டில்...

கடந்த வருடம் ஏ-9 வீதி கொடிகாமத்தில் ஆரம்பித்த எமது மருத்துவ சேவையானது மாபெரும் சாதனைகள் படைத்து பல நோயாளர்களின் நோய்களை தீர்த்து நன்மதிப்பினை பெற்றுள்ளது.

எம்மிடம் மருத்துவம் பெற்று சுகம் பெற்றவர்களின் பட்டியலில் உங்களையும் இணைத்து கொள்ளுங்கள்...

எமது மருத்துவ சேவையில்.



1. நீரிழிவு (சீனி வியாதி)
2. ஆஸ்துமா
3. பீனிசம் (சளி வியாதி)
4. ஒற்றைத் தலைவலி / தலைவலி
5. மூட்டுவாதம்
6. சரும வியாதிகள், சொராசிஸ், வெண்குஸ்டம்
7. ஆண்மைக் குறைவு.
8. மனநோய், மன அழுத்தம்
9. உடல் எடை குறைக்க/ அதிகரிக்க
10. பாரிச வாதம்.



போன்ற பல நோய்களுக்கு சிறந்த முறையில் வைத்தியம் அளிக்க முடியும்.

ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மருத்துவ சேவை நடைபெறும்.

மேலதிக தொடர்புகளுக்கும் முன் பதிவுகளுக்கும்
077-897 7328

**வைத்திய ஆலோசனைக்கு: 072-113 0797**

சமீப காலமாக எமது வளர்ச்சியினை பொறுக்க முடியாத ஓர் சிலர் எமது மருத்துவ முறைபற்றி தவறான தகவல்களை மக்களிடம் பரப்பி வருகின்றார்கள். மக்கள் இதனை நம்பி ஏமாற வேண்டாம்.

எமது மருத்துவரும் மருத்துவமனையும் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு, பதியப்பட்டு நடைபெற்று வருகின்றது.

யாழ் நகரில் எமக்கு வேறு கிளைகள் கிடையாது

**Dr. Janahan**
MBHS (Ind), MD(MA), DAC.
Reg.No.203

எமக்கு வேறு கிளைகள் கிடையாது

சன் ஹோமியோபதி மெடிக்கல் சென்டர்
ஏ-9 வீதி,
கொடிகாமம்,
யாழ்ப்பாணம்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 70 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc/ லண்டன் PR<br>தொ.இ: B/8458 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 15 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>தொ.இ: G/7607 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/8463 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MSc/ பொறியியலாளர்<br>தொ.இ: G/7608 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 34 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/8464 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 10<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/சுவீடன்<br>தொ.இ: G/1087 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 10 செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/8465 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 53 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/சுவீடன்<br>தொ.இ: G/1088 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் துரத்தியதில்

# இரண்டு பிள்ளைகளின் தந்தை குளத்தினுள் குதித்து உயிரிழப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இடைக்காட்டு குளத்தின் அலைகரையில் நின்ற 3 பேரை கண்ட பொலிஸார் அவர்களைத் துரத்தியுள்ளனர்.

இதன்போது மூவரும் குளத்தினுள் குதித்துள்ளனர். இதில் ஒருவர் நீந்திச் செல்கையில் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதில் குரவில் உடையார்கட்டு தெற்கு பகுதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான மகேஸ்வரன் இராமகிருஷ்ணன் என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது. இடைக்கட்டு குளத்தின் அலைகரை பக்கம் சட்டவிரோத கசிப்பு உற பத்தியை தடுக்கும் முக மாக சுற்று நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் குள்த்து அலை கரையில் நின்ற 3 பேரைக் கண்டதும் அவர்களை துரத்தி சென்றுள்ளனர்.பொலிஸார் துரத்தி சென்றபோது மூவரும் குளத்து நீரினுள் குதித்தனர். இந்நிலையில் இருவர் நீந்தி செல்லும் போது ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார். மற்றுமொருவர் நீந்தி தப்பிக்க மூன்றாம் நபர் நீந்தமுடியாது பொலிசாரிடம் சரணடை ந்துள்ளார் இந்நிலையில் பொலிஸார் நீரில் மூழ்கி பலியானவரையும் சரணடை ந்தவரையும் விட்டுவிட்டு சென்று விட்டனர்.

நீரில் மூழ்கியவரை மாலை 6 மணியளவில் அயலவர்கள் தேடி மீட்டபோதும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தராததால் அங்கு குழப்பநிலை தோன்றிய போது இதனையடுத்து அங்கு வருகைதந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன் பொலிஸாருக்கு தகவல் வழங்கி இரவு 8 மணியளவில் குறித்த பகுதிக்கு பொலிஸார் வரு கைதந்து சடலத்தை வைத்தியசாலைக்கு எடுத்து சென்றனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# இளைஞர்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான இவ்வாண்டுக்கான விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 20 இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு உடையார்கட்டு தெற்கு விளையாட்டு மைதானத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் க.கவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப் பினருமான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பல அரசியல் பிரமுகர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதேசத்தின் இளைஞர்.யுவதிகள். விளையாட்டு ஆர்வலர்கள் ஆகியோரை பங்கு கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.விஜிதரன் தெரிவித்துள்ளார். (2)

# காணாமல் ஆக்கப்பட்டோரின உறவுகளின் போராட்டம் வவுனியாவில் தொடர்கின்றது

(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை முன்னெடுத்து வரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சித்திரைப் புத்தாண்டிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஏ- 09, வீதியில் உள்ள வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை415 நாளை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# பேஸ்புக் நண்பர்கள் வழங்கிய நிதியில் சிறுமியின் உயிர் தப்பியது

இலங்கையில் பேஸ்புக் நண்பர்களின் உதவியின் மூலம் சிறுமி ஒருவர் உயிர் தப்பிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நான்கு வயதான டெனாரா மிஹேலி என்ற சிறுமிக்கு சத்திரசிகிச்சை மூலம் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்கு தேவையான பணத்தை வழங்க உதவுமாறு சிறுமியின் தந்தை டயான் பேஸ்புக்கில் பதிவு ஒன்றை வெளியிட்டார்.

இதனை பார்த்த பேஸ்புக் நண்பர்கள் அவருக்கு தேவையான நிதியினை வழங்கி, சிறுமியின் உயிரை காப்பாற்றியுள்ளனர்.

கடந்த நாட்களில் பேஸ்புக் பக்கங்களில் அழகிய சிறுமியின் புகைப்படங்கள் வெளியாகியிருந்தன.

இதய நோயினால் பாதிக்கப்பட்ட மிஹேலிக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள எட்டு இலட்சம் ரூபா பணம் தேவை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் தொழிற்சாலையில் பணியாற்றும் டயானினால் அந்தத் தொகையை பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து பேஸ்புக் நண்பர்கள் மூலம் பண உதவியை பெற்று தனது மகளை காப்பாற்றியுள்ளார். (2-7)

# இரண்டாவது புத்தாண்டிலும் வீதியில் கேப்பாப்பிலவு மக்கள்

## இனிப்புப் பண்டங்களை படையினர் பரிமாறினர்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்களுடைய பூர்வீக நிலமீட்புக்காக போராட்டம் மேற்கொண்டுவரும் கேப்பாப்பிலவு மக்கள் நேற்று 413 ஆவது நாளாக தொடர் போராட்டத்தை நடத்தினர்.

கடந்தவருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி கேப்பாப்பிலவு இராணுவ படை கட்டளை தலைமையகம் முன்பாக கூடாரம் அமைத்து தமது சொந்த நிலத்தை இராணுவத்திடமிருந்து மீட்டுத்தருமாறு கோரி தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்த கேப்பாப்பிலவு மக்கள் இரண்டாவது சித்திரை புத் தாண்டையும் வீதியில் கொண்டாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

புத்தாண்டில் கேப்பாப்பிலவில் போராட்டம் மேற்கொண்டு வரும் மக்களுக்கு நேற்றைய தினம் படையினர் இனிப்பு பண்டங்கள் வழங்கியுள்ளனர்

புத்தாண்டு நாளில் கேப்பாப்பிலவில் நிலைகொண்டுள்ள 59 ஆவது படைத் தலைமையகத்தின் மக்கள் தொடர்பாளர் அதிகாரி லெப்ரினன்ட் கேணல் அபேவர்த்தன தலைமையிலான ஆண்.பெண் படையினர் சிங்கள கலாசாரத்திற்கு அமைவாக உடை அணித்து இனிப்பு பண்டங்கள் கொண்டு வந்து போராட்ட மக்களுடன் பரிமாறிக் கொண்டுள்ளார்கள். (2-281)

# பெற்றோல் குண்டு வீச்சில்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழப்பு

(ஜோகன்ஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவில் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசியதில் இந்திய வம்சாவளி குடும்பத்தினர் ஐவர் பலியாகியுள்ளனர்.

தென் ஆபிரிக்காவில் பீட்டர் மரிட்ஷ் பர்க் நகரை சேர்ந்தவர் ஆசிஷ் மாஞ்ஜ்ரா வயது-45. இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு தென் ஆபிரிக்கா சென்று தங்கினார்.

அங்கு தென் ஆபிரிக்காவை சேர்ந்த கோரி பீபி என்ற பெண்ணை திருமணம் செய்தார். அவர்களுக்கு ஷீபீனா வயது-(18), மைருன்சிசா வயது-(14), முகமது ரிஷ்வான் வயது-(10) என்ற 3 குழந்தைகள் இருந்தனர்.

ஆசீஷ் மாஞ்ஜ்ரா வீடு ஒன்றை வாங்கினார். கடந்த 15 நாட்களுக்கு முன்புதான் அந்த வீட்டில் அவர்கள் குடியேறினர்.

இந் நிலையில் கடந்த 11 ஆம் திகதி இரவு இவர்கள் அனைவரும் வீட்டில் அயர்ந்து தூங்கி கொண்டிருந்தனர். அப்போது மர்ம நபர் மாஞ்ஜ்ரா வீட்டின் மீது பெற்றோல் குண்டை வீசி விட்டு தப்பி ஓடிவிட்டான்.

அதில் வீடு முழுவதும் எரிந்தது. இச் சம்பவத்தில் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த ஆசீஷ் மாஞ்ஜ்ரா அவரது மனைவி மற்றும் 3 குழந்தைகள் என 5 பேரும் உடல் கருகி பரிதாபமாக இறந்தனர்.

அதிகாலை 2 மணியளவில் அயல் வீட்டின் கூரை மீது ஏறி பெற்றோல் குண்டு வீசப்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (2-7)

# 14 இலட்சம் ரூபா பெறுதியான சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சட்ட விரோதமான முறையில் உள்நாட்டிற்கு சிகரெட்டுக்களை கொண்டு வந்த சீன நாட்டு பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 45 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகைகளின் பெறுமதி 14 இலட்சம் ரூபாய் என சுங்கப் பிரிவு ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுங்கப்பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (2-7)

# போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

களுத்துறை - ஹொரணை பிரதேசத்தில் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அவரிடம் இருந்த ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 12ஐ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 26 வயதுடையவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (2-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல் கரைச்சி பிரதேசத்தில் அதிகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்திலேயே அதிகளவு டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல் காணப்படுவதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்பில் சகல திணைக்களங்கள் ஊடாகவும் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் இல்லாதுள்ளபோதும், டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை அடையாளம் கண்டு அவற்றைச் சீர்செய்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் தகவல் தெரிவித்துள்ள சுகாதார சேவைகள் பணிமனை கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி,பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் இந்த டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கரைச்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல் அதிகளவில் காணப்படுவதா கவும் இந்த இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, ஆட்கள் நடமாட்டம் அற்ற வீடுகள், அந்தக்காணிகளில் காணப்படுகின்ற பாழடைந்த கிணறுகள், மலசலகூடங்கள் மற்றும் கழிவுநீர் நிலைகள், இவ்வாறு அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறு ஆட்கள் அற்றுக் காணப்படுகின்ற காணிகளை அதன் உரிமையாளர்கள் மூலமோ பராமரிப்பாளர்கள் மூலமோ துப்பரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டு மெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




# காணாமல் போனவர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட நபர் பொலிஸாரால் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் காணாமல் போனவர்கள் மீது தாக்குதல் நடத்திய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் கடந்த 12ஆம் திகதி 400 ஆவது நாளாக போராட்டம் நடத்தி வந்துள்ளார்கள். இந்நிலையில் இரவு 7.30 மணியளவில் குறித்த கொட்டிலில் போராட்டத்தை மேற்கொண்டுவரும் காணாமற்போனவர்களின் உறவினர்கள் மீது கத்தி கொண்டு தாக்குதல் நடத்த முற்பட்ட வேளை கதிரை மற்றும் பாத்திரங்கள் மீது வெட்டிவிட்டு பிரஸ்தாப நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் வீதிக்காவல் நடவடிக்கையில் நின்ற பொலிஸார் குறித்த சம்பவ இடத்திற்கு சென்று நடவடிக்கை எடுத்தனர்.

இதன்போது குறித்த நபர் வந்த மிதிவண்டி மற்றும் பை ஒன்றும் அதனுள் தொலைபேசி, கத்தி என்பனவற்றை விட்டு விட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் காணாமல் போனவர்கள் சென்று முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்கள்.

குறித்த நபரிடமிருந்த கையடக்கத்தொலைபேசியினை வைத்துக் கொண்டு தொடர்புகளை ஏற்படுத்திய முல்லைத்தீவு பொலிஸார் குறித்த நபரின் இருப்பிடத்தை இனம் கண்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு தியோகநகர் கடற்கரைப்பகுதியில் சிறிய கொட்டில் ஒன்றில் வாசித்து வந்த மட்டக்களப்பினை சேர்ந்த க.மகேந்திரராசா (வயது 52) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இவர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் முன்னுக்கு பின்முரணான தகவல்களை தெரிவித்துள்ளதுடன் அந்நேரத்தில் தான் மது போதையில் இருந்துள்ளதாகவும் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும் கூறியுள்ளார்.

இவர் தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் முறைப்பாடு கிடைத்துள்ளது என்றும் இவர் ஒரு மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். காணாமற்போன வர்கள் குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்கள். குறித்த நபர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். (2-281)

# 317 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் செயலிழப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் பசுமை யுகத்தை நோக்கி எனும் வேலைத்திட்டத்தின் கீழ் 317.83 மில்லியன் ரூபா செலவில் சேவாலங்கா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயலிழந்து காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை பொறுப்பேற்றுக் கொண்ட சேவாலங்கா நிறுவனத்தின் ஊடாக 317.83 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டிருக்கின்றபோதும், இதன் ஊடாக எந்தவித மான நன்மைகளும் கிட்டவில்லை என்று விவசாய அமைப்புக்களும் கிராம மக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா,முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்களில் தொடர்ச்சியாக கேள்விகளை எழுப்பி வருவதுடன், அண்மையில் பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் குறித்த நிறுவனத்தின் ஊடாக 522 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்படி நிதியில் விவசாய பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பதிலளிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வீதியை விட்டு விலகிய லொறி வேலியுடன் மோதுண்டு விபத்து




(பனிக்கன்குளம்)

வீதியை விட்டு விலகிய லொறி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர். வவுனியா பம்பைமடுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லொறி விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பெரியகட்டு பகுதியிலிருந்து பம்பைமடு நோக்கி பயணித்த லொறி பம்பைமடு நரசிங்கர் ஆலயத்திற்கு அருகே வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகே காணப்பட்ட வேலியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் லொறியின் சாரதி உட்பட இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துச் சம்பவம் தொடர்பானமேலதிகவிசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டனர். (2-281)



வவுனியா ஆதிவிநாயகர் தேவஸ்தானத்தின் சித்திரைத் தேர் பவனி நேற்று இடம்பெற்றது. பலநூற்றுக்கணக்கான பக்தர்கள் புடைசூழ அடியவர்கள் தமது நிவர்த்திக் கடன்களைத் தீர்க்க அங்கப் பிரதிஷ்டை செய்து கற்பூரச்சட்டி ஏந்தி விநாயகப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட சித்திரைத் தேரில் வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார். (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு குமுழமுனை இளைஞர்களின் விளையாட்டு



(பனிக்கன்குளம்)

சித்திரை புத்தாண்டை சிறப்பிக்கும் முகமாக குமுழமுனை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் விளையாட்டு நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது.

குமுழமுனை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் சிறப்பான முறையில் மெதுவாக சைக்கிள் ஓடுதல், மெதுவாக மோட்டார் சைக்கிள் ஓடுதல், பலூன் ஊதி உடைத்தல், உழவு இயந்திரம் பெட்டி கொழுவி பின்பக்கமாக செலுத்துதல், ஆண், பெண் இருபாலருக்குமான கயிறுழுத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

அத்துடன் சித்திரை புத்தாண்டான நேற்றைய தினம் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதனோட்ட போட்டி நடைபெற்றது. அத்தோடு குமுழமுனை கொட்டு கிணற்று பிள்ளையார் ஆலயத்தில் அலங்கார உற்சவ திருவிழா நடைபெற்று அதன் பின்னர் குமுழமுனை இளைஞர்களின் ஏற்பாட்டில் கலை நிகழ்வுகளும் அதனை தொடர்ந்து விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இசை விருந்தாக யாழ்.சுலக்சனின் சுருதி இசை நிகழ்வும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (2-281)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளம்பி வருட இராசி பலன்கள்

## 14.04.2018-13.04.2019



# பணவரவு திருப்தி தரும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

விளம்பி வருடம் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தன ஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி சனியுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். தன பஞ்சமாதிபதியான குரு பகவான் விரய ஸ்தானத்தில் வக்ரம் பெற்றிருக்கிறார். புரட்டாதி மாதம் நடைபெறும் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு தன பஞ்சமாதிபதியான குரு, உங்கள் இராசிக்கு வருகிறார். வருடத் தொடக்கத்தில் 3இல் கேதுவும், 9இல் ராகுவும் உள்ளது. 6ஆம் இடத்தில் தொழில் ஸ்தானாதிபதி சூரியனுடன் 7, 12 இற்கு அதிபதியான சுக்ரன் இணைந்திருக்கிறார். அவர்கள் இருவரையும் குரு பார்க்கிறார். புத்திர ஸ்தானத்தில் அஷ்டம லாபாதிபதியான புதனுடன், சந்திரன் இணைந்திருக்கிறார். 2 இல் செவ்வாய்-சனி சேர்க்கை பெற்றிருக்கிறது. வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய்-சனி சேர்க்கை இருப்பதால், அடிக்கடி உங்களுக்கு கோபம் வரலாம்.

இந்த புதிய வருட கிரக நிலைகளுடன், உங்களுடைய சுய ஜாதகத்தின் கிரக நிலைகளை ஒப்பிட்டுப் பார்த்து, அதற்கு தகுந்த பரிகாரங்களைச் செய்து கொள்வது நன்மை அளிக்கும்.

விளம்பி வருடத்தின் சித்திரை மாதப் பிறப்பு சனிக்கிழமையில் நிகழ்கின்றது. உங்கள் இராசிக்கு 3,4 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். சுக ஸ்தானம் மற்றும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி பகவானுக்குரிய தினத்தில் இந்த ஆண்டு தொடங்குவதால் சுகங்களும் சகல நன்மைகளும் கிடைக்கும் என்றே சொல்லலாம். ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் அதற்குரிய பரிகாரங்களையும் ஒளி மயமான வாழ்வு அமைய 9 ஆம் இடத்து ராகு, 3 ஆம் இடத்து கேதுவிற்குரிய சர்ப்ப சாந்தியையும் யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது.

### குரு பார்வை பலன்!

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் ஓரளவு விரயத்தைக் கொடுத்தாலும் வருமானம் திருப்திகரமாகவே இருக்கும். எந்தக் காரியம் செய்தாலும் தடை ஏற்படாது. பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக அனுகூலங்கள் கிடைக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைக்க வேண்டுமானால் குரு பலம் பெற்றிருக்க வேண்டும். குரு வக்ரம் பெற்றிருப்பதால் வியாழன் தோறும் விரதமிருந்து குருவை வழிபட்டு வாருங்கள். 12 ஆம் இடத்தில் இருக்கும் குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது.

4ஆம் இடத்தை குரு பார்ப்பதால், தாய் வழி ஆதரவு கிடைக்கும். பெற்றோரின் உடல் நலம் சீராகும். அவர்களின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள். வீடு கட்டும் யோகம் அல்லது வீடு வாங்கும் யோகம் உருவாகும். மாலை சூடும் வாய்ப்பிற்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல வரன் கிடைக்கும். வேலையில் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்படும். வாகன யோகம் உண்டு.

குருவின் பார்வை 6ஆம் இடத்தில் பதிவதால் அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும். ஒருசிலருக்கு பணி நிரந்தரமாகும். வேலைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். ஊதிய உயர்வும், சலுகைகளும் உண்டு. வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

8ஆம் இடத்தை குரு பார்ப்பதால், தொழிலில் ஏற்பட்ட விரயங்களை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் உருவாகும். பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை தானாக வந்து சேரும். புதிய வாகனங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். முக்கியமானவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய பங்குதாரர்களால் தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

### செவ்வாய்-சனி சேர்க்கையும், பார்வையும்!

14.4.2018 முதல் 29.4.2018 வரை தனுசு இராசியில் சனி-செவ்வாய் சேர்க்கை ஏற்படுகிறது. 20.3.2019 முதல் 13.4.2019 வரை செவ்வாய், சனியைப் பார்க்கும் அமைப்பு உள்ளது. செவ்வாய்-சனி சேர்க்கை குரு வீட்டில் ஏற்படுவதால் பெரிய அளவில் விரயங்கள் ஏற்படாது. இருப்பினும் குடும்பச்சுமை கூடும். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. செவ்வாயோடு, சனி பார்வை காலத்தில் உடன் பிறப்புகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு மறையும். ஒரு சிலருக்கு இடமாற்றம், பணி மாற்றம் உண்டு. இதுபோன்ற காலங்களில் சனிக்குரிய வழிபாடுகளையும், செவ்வாய்க்குரிய வழிபாடுகளையும் முறையாகச் செய்வது நல்லது.

### விருச்சிகத்தில் குரு!

18 ஆம் திகதி (4.10.2018) வியாழக்கிழமை அன்று, விருச்சிக இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிறார். அவர் வியாழனுக்குரிய நட்சத்திரமான விசாகம் 4ஆம் பாதத்தில் உங்கள் இராசிக்கு வருகிறார். ஜென்ம குருவால், இதுவரை இருந்த தாமதங்களும், தடைகளும் அகலும். சேமிப்பு உயரும். செல்வாக்கு மேலோங்கும். தன பஞ்சமாதிபதி இராசிக்கு வரும்பொழுது தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். இடமாற்றங்கள் இனிமை தரும்.

ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். குரு பார்க்கும் இடங்களெல்லாம் புனிதமடைகின்றன.

5ஆம் இடத்தை குரு பார்ப்பதால், பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவடைகிறது. எனவே பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். குடும்ப ஒற்றுமை பலப்படும். சொந்த பந்தங்கள் பகையை மறந்து பழகுவர். பிள்ளைச் செல்வம் இல்லாதவர்களுக்கு இப்பொழுது புத்திரப்பேறு கிடைப்பதற்கான அறிகுறி தென்படும்.

குருவின் பார்வை 7ஆம் இடத்தில் பதிவதால் கல்யாண வாய்ப்பு கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். கடல் தாண்டிச் செல்லும் முயற்சி கைகூடும். மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும். உறவினர்கள் நட்பாவார்கள். பெற்றோரின் மணிவிழா, பவளவிழா கொண்டாடும் வாய்ப்பு உண்டு.

9ஆம் இடத்தை குரு பார்ப்பதால், பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். அன்பு நண்பர்களின் ஆதரவோடு வெளிநாட்டு யோகம் வாய்க்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். மின் சாதனப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்ல வழி பிறக்கும்.




### ராகு-கேது பெயர்ச்சி!

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 2ஆம் இடத்தில் கேதுவும், 8ஆம் இடத்தில் ராகுவும் வருவதால் எண்ணற்ற நல்ல மாற்றங்கள் வரப் போகிறது. குரு வீட்டில் கேது சஞ்சரிக்கும் பொழுது, குருவருள் நிச்சயமாக உங்களுக்குத் தேவை. குருவருளைப் பெறும் போது, திருவருளும் கைகூடும். நீண்ட நாட்களாக நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது படிப்படியாக நடைபெறத் தொடங்கும். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் கூடும்.

அஷ்டமத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. அசையாச் சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதற்குரிய தொகை கைகளில் இல்லையே என்ற கவலைப்பட வேண்டாம். தொகை தானாக வந்து சேரும். வீடு மாற்றங்களும் சாதகமாக அமையும். நாடிவரும் நட்புகளுக்காகவும், ஓடிவரும் உறவுகளுக்காகவும் செலவிடும் சூழ்நிலை. உண்டு. இதுபோன்ற காலங்களில் ராகு-கேதுகளுக்குரிய சர்ப்ப சாந்திப் பாரிகாரங்களை உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலத்தில் யோக பலம் பெற்ற நாளில் செய்வது நல்லது.

### வளர்ச்சிக்குரிய வழிபாடு!

பௌர்ணமி தோறும் விரதமிருந்து கிரிவலம் வருவது நல்லது. பிரதோஷ வழிபாடு நற்பலன்களை வழங்கும். சிறப்பு வழிபாடாக தஞ்சை மாவட்டம் திருக்கருகாவூரில் உள்ள கர்ப்பரட்சாம்பிகை சமேத முல்லைவனநாதரை வழிபாடு செய்து வாருங்கள். சிவ பதிகம் பாடினால் சிறப்பான வாழ்வும், செல்வநிலை உயர்வும் ஏற்படும்.

### குரு மற்றும் சனி வக்ர காலங்கள்!

குரு உங்கள் இராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக இருப்பதால், அதன் வக்ர காலத்தில் கூடுதல் கவனம் தேவை. பணப்பற்றாக்குறை ஏற்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம்தான். குடும்பச்சுமை கூடும். `முக்கிய நபர்களைச் சந்தித்து முன்னேற்றம் கூட என்ன செய்யலாம் என்று ஆலோசிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களையும் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது.

சனியின் வக்ர காலத்தில் சகோதரர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். உங்களைச் சார்ந்திருப்பவர்களால் விரயங்கள் ஏற்படும். வீடு கட்டும் முயற்சியிலோ, கட்டிய வீட்டைப் பழுதுபார்க்கும் முற்சியிலோ ஈடுபடலாம். இருப்பினும் இந்த காலத்தில் கவனம் தேவை. குரு மற்றும் சனி வழிபாடு அவசியம்.

### விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு!

விளம்பி வருடத்தில் உங்களுக்கு எண்ணற்ற நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகிறது. நீங்கள் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதியும் வரன்கள் சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகள் கைகூடும். உடன்பிறப்புகளின் பகை மாறும். தாய் வழி ஆதரவு கூடுதலாகக் கிடைத்தாலும் உடல் நலத்தில் கவனம் தேவை. புகுந்த வீட்டில் பெருமை கூடும். செவ்வாய்-சனி சேர்க்கை காலத்தில் கவனமுடன் செயற்படுவது நல்லது. குல தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதோடு ராகு-கேதுக்களுக்குரிய பிரீதிகளை முறையாகச் செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து அனுகூலமும், உத்தியோக உயர்வும் உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுக நகருக்கான சுரங்க வீதிக்கு 800 மில். டொலரை முதலீடு செய்கிறது சீனா

(கொழும்பு)


1.4 பில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படும் கொழும்பு துறைமுக நகரை, கொழும்புடன் இணைக்கும் நிலத்தடி சுரங்க வீதி வலையமைப்பில் 800 மில்லியன் டொலரை சீன நிறுவனம் ஒன்று முதலீடு செய்யவுள்ளது.

கடலுக்குள் சீன நிறுவனத்தினால் அமைக்கப்படும் கொழும்பு துறைமுக நகரை, பிரதான நகருடன் இணைக்கும் சுரங்க வீதி வலையமைப்புகள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீதி வலையமைப்பு திட்டத்தில் 800 மில்லியன் டொலரை முதலீடு செய்வதற்கு சீனாவின் தொடர்பாடல் கட்டுமான நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கான உடன்பாடு ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிலம் தொடர்பான சட்ட நெறிமுறைகள் வகுக்கப்பட்ட பின்னர், கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்று பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். 269 ஏக்கர் பரப்பளவில் துறைமுக நகருக்காக கடலுக்குள் நிலத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 60 வீதத்துக்கும் அதிகமானளவு நிலப்பகுதி ஏற்கனவே உருவாக்கப்பட்டு விட்டது. இந்த ஆண்டுக்குள் நிலத்தை மீட்கும் பணிகள் முடிந்து விடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# மகிந்தவின் வீட்டில் புதுவருடக் கொண்டாட்டம்





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் சிங்கள புதுவருடத்தை தங்காலையிலுள்ள தமது கார்ல்டன் இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

குடும்பத்தினர் மட்டு மன்றி, ஊர் மக்களையும் அழைத்துக் கொண்டாடிய இந் நிகழ்வு, அவரது முகப்புத்தகத்தில் நேரடியாக ஒளி பரப்பப்பட்டது. சுபநேரத்தில் பால் பொங்கப்பட்டு, பாரம்பரிய நிகழ்வுகளுடன் இந் நிகழ்வு நடை பெற்றது. அத்தோடு, புத்தாண்டை முன்னிட்டு சிறப்புப் பாடல் களையும் தயாரித்து வெகு விமரிசை யாக மகிந்த ராஜபக்ஷ இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

நிகழ்விற்கு வருகை தந்த மக்கள், இந்த நாட்டை மீண்டும் ஆட்சி செய்வதற்கான சந்தர்ப்பம் மகிந்த ராஜபக்ஷ விற்குக் கிடைக்க வேண் டுமென வாழ்த்திச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 70 மதுபான போத்தல்களுடன் பொலிஸாரால் ஒருவர் கைது

(கொழும்பு)

பொகவந்தலாவ கெம்பியன் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் இருந்து 70 மதுபான போத்தல்கல் ஹற்றன் குற்றத்தடுப்பு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதோடு ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளதாக ஹற்றன் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொகவந்தலாவ கெம்பியன் பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமாக தமிழ், சிங்கள் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு விற்பனை செய்தற்காக வைக்கப்பட்டிருந்த 70 மதுபான போத்தல்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக ஹற்றன் குற்றத்தடுப்பு பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (இ-7)

# அருள் வழங்கும் அட்சய திருதியை



(வெள்ளிக்கிழமை தொடர்ச்சி)

"பவதி பிக்ஷாந்தேஹி"

உள்ளே இருந்து ஒரு மாதரசி வெளிப்பட்டாள். பாலகனைக் கண்டாள். அனிச்சையாகவே அவளது கரங்கள் சேர்ந்து குவிய, சங்கரனை வணங்கினாள். ஏனோ தெரியவில்லை... இந்த பாலகனைக் கண்டதுமே அவள் உள்ளம் விம்மியது. கண்கள் தானாக நீரைச் சொரிந்தன. மனம் ஏதேதோ புலம்ப நினைக்க, அதன் வெளிப்பாடாய் அவள் உதடுகள் துடித்தன.

உள்ளுக்குள் ஒரு தெய்வீகச் சிலிர்ப்பு. ஆண்டவனை நேரில் தரிசித்த பரவசம்! கணநேரம் செய்வதறியாது திகைத்து நின்றாள். மறு கணம் தன்னிலை உணர்ந்தவளாக உள்ளே ஓடினாள். பாலகனுக்கு பிக்ஷையிட ஏதாவது உள்ளதா எனத் தேடிப் பார்த்தாள். விதியின் விளையாட்டு... குன்றிமணி அரிசி இல்லை. பரிதவித்துப் போனாள். எனினும் முயற்சியைக் கைவிடாமல், அடுத்தடுத்த அறைகளிலும் தேடத் தொடங்கினாள். ஒரு பானையில் நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது.

அகமகிழ்ந்து பயபக்தியோடு அதை எடுத்துவந்து, கை நடுக்கத்துடன் சங்கரனின் பிக்ஷை பாத்திரத்தில் இட்டாள்.

புன்னகையுடன் ஏற்றுக் கொண்ட சங்கரருக்கு, அவளின் தவிப்பையும், கை நடுக்கத்தையும் கண்டு சடுதியில் புரிந்து போனது... அந்த இல்லத்தின் இல்லா மையும் இயலாமையும்!

மெள்ள கண்மூடி, மகாலட்சுமியை தியானித்தான். மனதாரப் பிரார்த்தித்தான்...

அங்கம் ஹரே:

புளகபூஷணமாஸ்ரயந்தீ

ப்ருங்காங்கனேவ

முகுளாபரணம் தமாலம்

அங்கீக்ருதாகில விபூதிர

பாங் கலீலா

மாங்கல்யதாஸ்து

மம மங்களதேவதாயா: -

திருமகளின் கடைக்கண் பார்வை வேண்டும், அந்தக் குடிசையில் சகல மங்கலங்களும் பெருக வேண்டும்... எனத் துதித்துப் பாடினான்.

அலைமகள் கருணை செய்தாள்: அங்கே அந்த இல்லத்தில் பொன்மாரி பொழிந்தது! இந்த தெய்வீகச் சம்பவம் குறித்து சுவாரஸ்யமான கர்ண பரம்பரைத் தகவல் ஒன்றும் உண்டு.

துவாபர யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் அருளால் குபேர சம்பத்து பெற்ற குசேல தம்பதியே கலியுகத்திலும் பிறந்து வறுமையை அனுபவித்தனர். முற்பிறவியில் அவர்களுக்குக் கிடைத்த செல்வ போகத்தை முறையுடன் செலவழிக்காததால், இப் பிறவியில் அவர்களுக்கு வறுமை வாய்த்தது என்று திருமகள் ஆதிசங்கரரிடம் தெரிவித்ததாகவும், அவர் 'என்பொருட்டு இவர்களுக்கு அருள் செய்ய வேண்டும்' என்று கனகதாரா ஸ்தோத்திரம் பாடி தேவியை வழிபட்டதாகவும் சொல்கிறது அந்தத் தகவல்!

அலைமகளை துதித்து ஆதிசங்கரர் அருளிய 'கனகதாரா ஸ்தோத்திரம்', அவர் அருளிய முதல் பாடல்!

கனகதாரா ஸ்தோத்திரங்களினால் தினசரி எவர் துதிக்கின்றனரோ, அவர்கள் மிகுந்த பாக்கியசாலிகளாகத் திகழ்வார்கள் என்பது ஆதி சங்கரரின் திருவாக்கு.

அட்சய திருதியை தினத்தில் இந்த ஸ்தோத்திரத்தைப் பாடி அலை மகளை வழிபடுவதால், வீட்டில் லட்சுமி கடாட்சம் பெருகும். கனக தாரா ஸ்தோத்திரம் மட்டுமல்ல... அட்சய திருதியை அன்று துதித்து வழிபட உகந்த வேறுசில தெய்வப் பாடல்களும் உண்டு.

## பதினாறு பேறுகளும் கிடைக்கும்

அபிராமிப் பட்டர் அருளிய அபிராமியம்மை பதிகத்தில் ஒரு பாடல் பதினாறு பேறுகளையும் விபரித்து அவற்றை அருளும் படி வேண்டுகிறது.

கலையாத கல்வியும்

குறையாத வயதுமோர் கபடு வாராத நட்பும்

கன்றாத வளமையும்

குன்றாத இளமையும்

கழுபிணியிலாத உடலும்

சலியாத மனமும்

அன்பகலாத மனைவியும்

தவறாத சந்தானமும்

தாழாத கீர்த்தியும்

மாறாத வார்த்தையும்

தடைகள்வாராதகொடையும்

தொலையாத நிதியமும்

கோணாத கோலுமொரு

துன்பமில்லாத வாழ்வும்

துய்யநின் பாதத்தில்

அன்பும் உதவிப் பெரிய

தொண்டரோடு கூட்டு

கண்டாய்: அலையாழி அறிதுயிலுமாயனது தங்கையே

ஆதிகடவூரின் வாழ்வே

அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி

அருள்வாமி அபிராமியே!

அம்பாளுக்கு நெய்தீபம் ஏற்றிவைத்து, இந்தப் பாடலைப் பாடி வழிபட வேண்டும். இதனால் கல்வி, நீண்ட ஆயுள், நல்ல நட்பு, குறையாத வளம், அன்பு மிகுந்த மனைவி, குழந்தை பாக்கியம், புகழ், வாக்குத்தவறாத நிலை, தடைகள் இல்லாத கொடைத்தன்மை, அழியாத செல்வம், அறநெறி மிகுந்த அரசாங்கம், துன்பம் இல்லாத வாழ்வு, அம்பாளிடம் குறையாத பக்தி ஆகிய 16 பேறுகளும் வாய்க்கும்.

## திருப்புகழ் பாடல்...

கோவை மாவட்டம் சோமனூருக்கு அருகிலுள்ள தலம் கொங்கணகிரி. இங்கு அருளும் முருகப்பெருமானைப் போற்றி அருணகிரியார் அருளிய இந்தப் பாடல் என்னென்ன வேண்டுகிறது தெரியுமா?

ஐங்கரனை ஒத்தமனம்

ஐம்புலம் அகற்றிவளர் அந்தி

[illegible] வருள்

[illegible] னக்குள்

வளர் செந்தமிழ்வ முத்தி

உனை அன்பொடுது திக்க

மனம் அருள்வாயேதங்கியத

வத்துணர்வு தந்தடிமை முத்தி

பெற சந்திரவெளிக்கு வழி

அருள்வாயேதண்டிகை கனப்

பவுசு எண்டிசைம திக்க

வளர் சம்ப்ரமவி தத்துடனெ

அருள் வாயேமங்கையர்

சுகத்தைவெகு இங்கிதம்என்

உற்றமனம் உன்றனை

நினைத்தமைய அருள்

வாயே

மண்டலிகா ரப்பகலும்

வந்தசுப ரக்ஷைபுரி

வந்தணைய புத்தி

யினை அருள்வாயே

கொங்கில் உயிர் பெற்று

வளர் தென்கரையில்

அப்பர் அருள்கொண்டு

உடல் உற்றபொருள் அருள்

வாயே

குஞ்சரமு கற்கிளைய

கந்தன் என வெற்றிபெறு

கொங்கணகி ரிக்குள்

வளர் பெருமாளே.

கருத்து: யானை முகம் கொண்ட விநாயகருக்கு இளையோனாக விளங்கி, மூன்று உலகங்களையும் தனது வலிமையினால் வெற்றி கொள்ளும், 'கொங்கணகிரி' எனும் திருமலையின் மீது எழுந்தருளியிருப்பவரே!

ஐந்து திருக்கரங்களைக் கொண்ட விநாயகரைப் போன்று, எல்லா காரியங்களுக்கும் முற்படும் மனமானது ஐந்து புலன்களின் வழியே செல்லும் தொழிலை நீக்கி, மறுப்புநிலைஎன்றவேலை நிலை அகற்றி நினைவற்ற நிலையைத் தந்தருள்வீர்.

செந்தமிழ் பாடலால் அன்புடன் துதி செய்ய அருள் புரிவீர். தவத்தால் வருகின்ற மெய்யுணர்வைத் தந்து சிவகதி பெறுமாறு சந்திர ஒளி வீசுகின்ற மேலைவெளிக்கு வழியை அருள்வீர். எட்டு திசைகளிலும் உள்ளவர்கள் மதிக்குமாறு மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்கின்ற பெருவாழ்வுக்கு அருள்புரிவீர்.

பெண்களது இன்பத்தை, மிகுந்த இனிமை என்று எண்ணி சேர்ந்துள்ள மனமானது, உம்மை நினைத்து அமைதியடைய அருள் புரிவீர். இரவும், பகலும் உயிர்களைக் காத்து அருள்புரிந்து சிவநெறியில் வந்து சேர நல்லீறிவைத் தந்தருள்வீர்.

அவிநாசி என்ற தலத்தின் தென் கரையில் சுந்தரமூர்த்தியினால், சிவபிரான் துணை கொண்டு, முதலை வாய்ப்பட்ட மகன் உயிர் பெற்று உடம்புடன்வெளிப்பட்ட அற்புதம் நிகழ்ந்தது. அப்படியான ரகசியப் பொருளை எனக்கும் அருள் வீராக என வேண்டுகிறது. அருணகிரியாரின் இந்தத் திருப்புகழ் பாடல். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தமிழகம் விரைவில் தனிநாடாக மலரும்

### வைகோ தெரிவிப்பு



(சென்னை)

தமிழகம் விரைவில் தனி நாடாக மலரும் என, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த வியாழக்கிழமை பிரதமர் மோடியின் வருகையை எதிர்த்து கறுப்புக் கொடி போராட்டத்தை முன்னெடுத்திருந்த வைகோ இவ்வாறு தெரிவித்தார்.


"தமிழகத்தில் மத நல்லிணக்கத்தை குழப்பி மக்களைச் சீர்குலைக்க பா.ஜ.க. முயல்கிறது. வளம் மிக்க தமிழ்நாட்டை எதியோப்பியா போன்று மாற்ற முயலும் பிரதமர் மோடியின் கனவு நிறைவேறாது.

அத்துடன் 2047 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி சுதந்திர தினம் கொண்டாடப்படும் போது. இந்தியாவின் பல பகுதிகள் தனித்தனி நாடுகளாக பிரிந்துவிடும்.

தமிழ்நாட்டுக்கு தேவையற்ற திட்டங்களை கொண்டு வந்து தமிழக மக்களை அழிக்க முற்படுகிறார்கள். தமிழ்நாடு எதற்காக இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டும். விரைவில் தமிழகம் தனிநாடாக மலரும் எனத் தெரிவித்தார். (இ-7)

## மக்களின் உண

## செவி கொடுங்



(சென்னை)

காவிரி நதிநீர்ப் பகிர்வு தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பை நிறைவேற்றுவதைத் தள்ளிப் போட்டதற்கான பெரியவிலையை பா.ஜ.க. அரசு தமிழகத்தில் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது.

சென்னை வந்த பிரதமருக்கு எதிரான போராட்டங்களுக்குக் கிடைத்திருக்கும் பரவலான ஆதரவும், சமூக வலைத்தளங்களில் 'திரும்பிச் செல்லுங்கள் மோடி' ஹேஷ்டேக்(#gobackmodi) சர்வதேச அளவில் நேற்றைய தினம் ட்ரெண்டிங் ஆக இருந்ததும், காவிரி விவகாரத்தில் மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு எதிரான தமிழகத்தின் உணர்வைப் பிரதிபலித்திருப்பதாகவே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

காவிரி தொடர்பாக ஒரு வார்த்தை கூட பிரதமர் பேசாமல் திரும்பிச் சென்றிருப்பது பெருத்த ஏமாற்றமாகவே இருக்கிறது.

கால் நூற்றாண்டு இழுபறிக்குப் பின் அளிக்கப்பட்ட தீர்ப்பு இது. இடைப்பட்ட காலத்திலேயே நிறைய இழந்துவிட்டார்கள் தமிழக விவசாயிகள். இறுதித் தீர்ப்பு ஏற்கனவே கிடைத்துவந்த தண்ணீரிலும் கொஞ்சம் குறைத்தது. அதையும்கூட உறுதிப்படுத்த மேலாண்மை வாரியம் அமைப்பதை மத்திய அரசு காலம் கடத்தும் நிலையில்தான் தமிழகத்தில் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன.

மே 12 அன்று கர்நாடகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மோடி அரசு ஏன் இழுத்தடிக்கிறது என்பது யாருக்கும் புரியாத ரகசியம் ஒன்றும் இல்லை. தேசியக் கட்சி என்ற அள

## இனந்தெரியாத நபர்களால் அம்பேத்கர் சிலை உடைப்பு

### டில்லியில் சம்பவம்

(டில்லி)

டில்லி அருகே கிரேட்டர் நொய்டா பிஸ்ராக் பகுதியில் அம்பேத்கர் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து அடையாளம் தெரியாத சிலர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

டில்லி அருகே கிரேட்டர் நொய்டா பிஸ்ராக் பகுதியில் உள்ள ரிச்பால் கார்கி கிராமத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலை உள்ளது.

நேற்று முன்தினம் மர்ம மனிதர்கள் சிலர் இந்த அம்பேத்கர் சிலையை உடைத்து விட்டனர். இந்த நிலையில் அந்த பகுதி மக்கள் அம் பேத்கர் சிலை உடைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சி யடைந்தனர்.

அங்கு ஏராளமான பொது மக்கள் திரண்டனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். அங்கு அசம்பாவிதம் ஏற்படாத வகையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

அம்பேத்கர் சிலை உடைக்கப்பட்டது தொடர்பாக அடையாளம் தெரியாத சிலர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (7)

## நவாஸ் ஷெரீப்பிற்கு தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை



(அகமதாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தகுதி நீக்கம் செய்யப்பட்டது தொடர்பான அரசியல் சாசன வழக்கில், அவர் தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை விதித்து பாகிஸ்தானின் உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

பாகிஸ்தானின் பிரதமராக நவாஸ் ஷெரீப் இருந்தவேளை, பனாமா லீக்ஸ் விவகாரத்தில் குற்றவாளியென பாகிஸ்தானின் உயர் நீதிமன்றம் கடந்தாண்டு ஜூலை மாதம் அறிவித்து, அவரை தகுதி நீக்கம் செய்து உத்தரவிட்டது.

இதனை அடுத்து, தனது பதவியை இராஜினாமா செய்த அவர் அந்த வழக்கை மேல்முறையீடு செய்தார்.

நவாஸ் ஷெரீப் தேர்தலில் போட்டியிட நிரந்தர தடையா என தகுதி நீக்க வழக்கில் குழப்பம் எழுந்தது.

இதனை அடுத்து, இது தொடர்பாக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு விசாரித்து வந்து தீர்ப்பை ஒத்தி வைத்தது.

இந்நிலையில், நவாஸ் ஷெரீப் தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை என நேற்று பாகிஸ்தானின் உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

## காஸா - இஸ்

## 30 பே

(காஸா)

காஸா - இஸ்ரேல் எல்லையில் தொடரும் மோதலில் இதுவரையில் 30 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு வாரங்களுக்கு மு[illegible] ஆரம்பிக்கப்பட்ட பிளேக் பிரைடே (flag Friday) போராட்டங்களின் போது இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மே 15 ஆம் திகதி பாலஸ்தீனத்தில் நக்பா நாள் அனுஷ்டிக்கப்படவிருப்பதை தொடர்ந்து காஸா- இஸ்ரேல் எல்லையில் பாலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டங்களில்

## உபி பாலியல் பலாத்கார வழக்கு பா.ஜ.க.எம்.எல்.ஏ.குல்தீப் கைது



(உன்னாவ்)

உத்தர பிரதேசத்தில் இளம் பெண் பலாத்கார வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பா.ஜ.க. எம்.எல்.ஏ. குல்தீப் சிங் செங்கரை சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று கைது செய்தனர்.

உத்தரபிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள பங்கர்மாவ் தொகுதி பா.ஜ.க. எம்.எல்.ஏ.குல்தீப் சிங்செங்கர். இவரும் அவரது சகோதரர் அனில் சிங்கும் தன்னை பலாத்காரம் செய்ததாக 17 வயது இளம் பெண் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதனால், அந்தப் பெண்ணின் தந்தை பப்புவை குல்தீப் சிங்கும் அனில் சிங்கும் தாக்கியதாகத் தெரிகிறது. ஆனால் பொலிஸார், தாக்குதலுக்கு ஆளான பப்புவை கைது செய்தனர்.

இ[illegible] சிறை யில் பப்பு [illegible] உயிரிழந் தார். இந்தச் சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தப் பின்னணியில், [illegible] பாக எம்.எல்.ஏ. குல்தீப்பின் சகோதரர் அனில் சிங்கை பொலிஸார் அண்மையில் கைது செய்தனர். எம்.எல்.ஏ. குல்தீப் சிங் மீதும் பொலிஸார் நேற்று முன்தினம் வழக்கு பதிவு செய்தனர். எனினும், இந்த வழக்கை உத்தர பிரதேச அரசு சி.பி.ஐ. வசம் ஒப்படைத்தது.

இதையடுத்து, வழக்கு தொடர்பாக நேற்று முன்தினம் மாலை சி.பி.ஐ. தனது விசாரணையைத் தொடங்கியது.

பின்னர் நேற்று அதிகாலை குல்தீப் சிங் வீட்டுக்குச் சென்ற சி.பி.ஐ. அதிகாரிகள், அவரை லக்னோவுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு பல மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர் கைது செய்யப்பட்டதாக சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று இரவு அறிவித்தனர்.

### பிரதமர் உறுதி

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி நேற்று கருத்து தெரிவித்தார். டில்லியில் அம்பேத்கர் நினைவு இல்லம் திறப்பு நிகழ்ச்சியின்போது அவர் பேசியதாவது,


நாகரிகமிக்க ஒரு சமூகத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. இந்தச் சம்பவங்கள் நம்மை வெட்கி தலைகுனிய வைக்கின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் யாரும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்பதை நாட்டு மக்களுக்கு உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

நமது பெண்களுக்கு நியாயமான நீதி கிடைக்கப்பெறும். இவ்வாறு மோடி உறுதியளித்தார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ர்வுகளுக்கு ...கள் மோடி!



விலும்சரி இந்நாட்டை ஆளும் கட்சி என்கிற நிலை யிலும் சரி. பா.ஜ.க. ஒருபோதும் செய்திருக்கக் கூடாத காரியம் இது. தமிழகத்தில் அடுத்தடுத்து போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கிய நிலையிலேனும் அக்கட்சி சுதாரித் திருக்க வேண்டும். ஆனால், டில்லியிலிருந்து இது சம்பந்தமாகப் பேசுபவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குரலில் பேசிவருகிறார்கள். பிரதமரோ தொடர்ந்து அமைதி காக்கிறார். உள்ளூர் பா.ஜ.கவினரோ போராட்டங்களைக் கொச்சைப்படுத்தும்விதமாகவே பேசிவருகி றார்கள்.

போராட்டங்களை முன்னெடுப்பவை எதிர்க்கட்சிகளாக இருக்கலாம். போராட்டங்கள் தமிழகத்தின் நலன் கருதி நடக்கின்றன, தமிழக மக்களின் உணர்வை அவை பிரதிபலிக்கின்றன. ஆள்பவர்கள் இதை உணர வேண்டும்.

மக்கள் குரலுக்கு காது கொடுக்காத ஆட்சியாளர்களுக்கு நேர்ந்த கதைகள் வரலாறு நெடுகிலும் கிடைக்கின்றன. அந்த வரலாற்றில் தான் தன் பெயரும் இடம் பெறவேண்டும்என்று நினைக்கிறாரா மோடி. (7)

நன்றி **The Hindu**

# கவாஜா மாவட்டம் தலிபான் வசம்
# ஆளுநர் உட்பட 15 பேர் ஆப்கானில் படுகொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கவாஜா ஓமரி மாவட்டத்தினை கைப்பற்றிய தலிபான் பயங்கரவாதிகள் ஆளுநர் உட்பட 15 பேரை கொன்று குவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளை அந்த நாட்டின் ஜனாதிபதி அஷ்ரப் கனி நேரடி பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். அதற்கு அமெரிக்காவும் ஆதரவு தெரிவித்தது.



ஆனாலும் கூட அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வராமல் இன்னும் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதிலும், தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதிலும் தீவிரமாகவுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி இரவு அங்கு உள்ள கஜினி மாகாணத்தின் முக்கிய மாவட்டமான கவாஜா ஓமரி மாவட்டத்தின் அரசு வளாகம் மீது அவர்கள் அதிரடி தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் அதிகாலை வரை இந்த தாக்குதல் நீடித்தது.

இந்த தாக்குதலில் அந்த மாவட்டத்தின் ஆளுநர் அலி தோஸ்த் ஷாம்ஸ் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் ஆளுநரின் 2 மெய்க்காப்பாளர்கள், 7 பொலிஸ் அதிகாரிகள், 5 உளவுத்துறை அதிகாரிகளும் அடங்குவர். இந்த தாக்குதலின் முடிவில், அந்த மாவட்டத்தை தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றினர்.

அத்துடன் மாவட்ட தலைமையகத்தை அவர்கள் தீயிட்டு கொளுத்தினர்.

இந்த தாக்குதல் பற்றி தலிபான் பயங்கரவாத அமைப்பின் செய்தி தொடர்பாளர் ஜபிகுல்லா விடுத்துள்ள அறிக்கையில், கவாஜா ஓமரி மாவட்டத்தில் நடந்த தாக்குதலில் 20 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டம், வீழ்ந்திருப்பது ஆப்கானிஸ்தான் அரசு தரப்புக்கு பலத்த பின்னடைவு எனக் கூறப்படுகிறது. (இ-7)

# ...ஸ்ரேல் தொடர்ந்து மோதல் ...ர் உயிரிழப்பு



ஈடுபட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் இராணுவத்தினர் அத்துமீறி கைப்பற்றிய பாலஸ்தீனத்தின் பகுதிகளை மீள அளிக்குமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்களை கலைப்பதற்காக இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இவ்வாறு தொடரும் மோதல்களினால் இதுவரை சுமார் 30 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன், காஸா - இஸ்ரேல் எல்லையில் மீண்டும் வெடித்துள்ள மோதலில் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்திருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை கடந்த டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி அறிவித்திருந்தார். அத்துடன், ஜெருசலேமின் அல்குட்ஸ் நகரில் இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதரகம் எதிர்வரும் மே 15 ஆம் திகதி திறக்கப்படுமெனவும் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

அவரின் குறித்த அறிவிப்பு சர்வதேச ரீதியில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இதனைத் தொடர்நது இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு இடையிலான பதற்றநிலைகள் அதிகரித்துள்ளதுடன், பரஸ்பர தாக்குதல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (7)

# அமெ.கூட்டுப்படைகள் சிரியாவில் வான்வழித் தாக்குதல் - ட்ரம்ப் அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க கூட்டு படைகள் சிரியாவில் வான்வழி தாக்குதலை நடத்தி வருகின்றன என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி அல் ஆசாத் தலைமையிலான ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை கட்டுப்படுத்துவதற்காக அரசு இராணுவத்தினை பயன்படுத்தி வருகிறது.

உள்நாட்டு போர் சூழ்ந்த சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற தீவிரவாத அமைப்புகளும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. இதுவரை அங்கு இலட்சக்கணக்கான பொதுமக்கள் வன்முறைக்கு பலியாகியுள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி அந்நாட்டின் தலைநகர் டமாஸ்கஸ் அருகே கிழக்கு கூட்டா பகுதியில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள டூமா நகரை கைப்பற்ற ரஷ்ய ஆதரவு பெற்ற சிரிய அரசு படைகள் முற்றுகையிட்டன.

இந்த நிலையில், கிழக்கு கூட்டா பகுதியில் சந்தேகத்திற்குரிய வகையிலான இரசாயன தாக்குதலில் 70 பேர் பலியாகி உள்ளனர் என தகவல் வெளியானது.

இந்த தாக்குதலில் விஷ வாயுக்கள் பயன்படுத்தப்பட்டன என சந்தேகம் எழுப்பப்பட்டது.

ஹெலிகொப்டர் ஒன்றில் இருந்து சரீன் என்ற நச்சு இரசாயன பொருள் அடங்கிய வெடிகுண்டு வீசப்பட்டிருக்கக்கூடும் என அமெரிக்க தொண்டு அமைப்பு ஒன்று குற்றச்சாட்டு தெரிவித்தது. எனினும் பலி எண்ணிக்கை 180ஐ தொட்டிருக்கும் என்றும். ஆனால் இரவு நேரம் மற்றும் தொடர் குண்டு வீச்சு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய முடியவில்லை என்றும் தகவல்கள் தெரிவித்தன.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தின் இரசாயன தாக்குதலை தடுக்க ரஷ்யா தோல்வி அடைந்து விட்டது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றச்சாட்டு கூறினார்.

இந்த நிலையில், சிரியா மீது அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் வான்வழி தாக்குதலை நடத்துகின்றன என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சிரியாவில் அறிவியல் ஆய்வுமையம்மற்றும்பல்வேறு சிரிய இராணுவ தளங்களும் இந்த தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன. (7)

# தலிபான், ஹக்கானி பயங்கரவாதிகளின் சொர்க்கபுரி பாகிஸ்தான்- இராணுவத்தளபதி

(வோஷிங்டன்)

தலிபான், ஹக்கானி தீவிரவாதிகளின் சொர்க்கபுரியாக பாகிஸ்தான் திகழ்வதாக அமெரிக்க நாடாளுமன்ற குழு முன் இராணுவ தளபதி மார்க் மில்லே கூறியுள்ளார்.



உலகளாவிய தீவிரவாத ஒழிப்பு போரில் அமெரிக்காவின் கூட்டாளியாக பாகிஸ்தான் இருக்கிறது. ஆனால் பயங்கரவாதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் அந்த நாடு உறுதிபட எடுப்பதில்லை என்பது அமெரிக்காவின் குற்றச்சாட்டாக அமைந்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற குழு முன்பாக அந்த நாட்டின் இராணுவ தளபதி ஜெனரல் மார்க் மில்லே பேசினார்.

அப்போது அவர் கூறும்போது, "ஒரு தீவிரவாத இயக்கத்துக்கு மற்றொரு நாடு சொர்க்க புரியாக திகழ்கிற போது அந்த தீவிரவாத இயக்கத்தை ஒடுக்குவது என்பது மிக மிக கடினமான காரியம்.

அந்த வகையில், இப்போது பாகிஸ்தானின் எல்லைப்பகுதிகள், தலிபான் மற்றும் ஹக்கானி வலைச் சமூக தீவிரவாதிகளின் சொர்க்கபுரியாக திகழ்ந்து வருகின்றன என்று குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, "தீவிரவாதிகள் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றால், அதற்கு பாகிஸ்தானும் உதவ வேண்டும். இது மிக முக்கியம். இந்த தீர்வில் பாகிஸ்தானும் ஒரு அங்கம். இது பிராந்திய ரீதியிலான பிரச்சினை ஆகும். இதை பாகிஸ்தான் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 பேரும் வெளியேறியமை அரசிற்கு பெரும் சக்தியாகும்

## நளின் பண்டார சுட்டிக்காட்டு




(கொழும்பு)

பெரும் மழை பெய்து தாய் நாட்டின் மேனியிலுள்ள அழுக்குகளை அடித்துச் செல்வது போன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள 16 பேரும் அர்சாங்கத்திலிருந்து சென்றமையால் அரசாங்கம் சுத்தமடைந்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இவர்கள் வெளியேறியதனால் அரசாங்கத்திற்கு புற்றுநோய்க்கான சிகிச்சை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும். இதனால் அரசாங்கத்துக்கு புதிய சக்தியுடன் முன்னோக்கிச் செல்ல முடியுமாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஹற்றன் நகர வீதிகள் நீரில் மூழ்கின





(ஹற்றன்)

ஹற்றன் நோர்வூட், கொட்டகலை, வட்டவளை, மஸ்கெலியா, தலவாக்கலை ஆகிய பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு, ஹற்றன் நகரப்பகுதியில் சில வீதிகள் நீரில் முழ்கியுள்ளன.

ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியில் மல்லியப்பு பகுதியில் நீர் செல்லும் வடிகான்கள் மூடியதனால் நீர் வெளியேறி வீதியை ஆக்கிரமித்தது. இதனால் அவ்வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நகரின் பாதைகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததுடன், நகருக்கு வருகை தந்தோர் திடீரென மழை பெய்தமையினால் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியிலும், ஹற்றன்- நுவரெலியா பிரதான வீதியிலும் மண்சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், வீதி வழுக்கும் தன்மையாக இருப்பதனாலும் வாகனச் சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (இ-7)

# பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக நிதியைப் பயன்படுத்துவதைத் தடுக்க இலங்கை நடவடிக்கை மேற்கொள்ளும்

(கொழும்பு)

பணத்தைத் தூய்மையாக்குதல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக நிதியைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு இலங்கை நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஏரான் விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அணி சேரா நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து விளக்கிய ஏரான் நிறுவனங்களில் 25 வீதத்தை கொண்டுள்ளவர்கள் குறித்தும், குறித்த தகவல்கள் பண தூய்மையாக்கல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் குற்ற திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு அரச நிறுவனச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று சிலர் தெரிவிக்கும் கூற்றை நிராகரித்துள்ளார்.

இதேபோன்று இந்த நிறுவனங்களின் பணிப்பாளர்கள் மற்றும் பங்கு உரிமையாளர்களிடம் விசாரணை செய்வதற்கு முழுமையான அதிகாரம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவற்றை நிராகரித்துள்ள அமைச்சர், எதிர்க்கட்சியினர் முதலீடுகளை மேற்கொள்வோர் தொடர்பில் பீதியை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான கூற்றுக்களைத் தெரிவிப்பதாக கூறினார்.



கடந்த வருடத்தில் ஆகக் கூடுதலாக நேரடி வெளிநாட்டு முதலீடு பெறப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கான முயற்சிக்காக இவ்வாறானோர் இத்தகைய விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர். பணத்தை தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்காக நிதி வழங்கப்படுவதை தடுப்பதற்காக பல நடவடிக்கைகளை வலுவூட்டுவதற்கும் செயற்றிறன் மிக்கதாக முன்னெடுப்பதற்கும் நிறுவன சட்டத்தில் திருத்தங்கள் சிலவற்றை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரக் கட்சியில் மூன்று அணிகள்

## பிரசன்ன எம்.பி. விசனம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த அணி, மைத்திரி மற்றும் ரணில் அணி என மூன்றாக பிரிந்துள்ளதாக கூட்டு எதிர்க் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் பிரச ன்ன ரணதுங்க விமர்சித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ரணில் அணியினரான சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர ஆகியோர் பிரதமர் ரணிலுடன் அமைச்சர் பதவிகளை வகித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் பதவிகளை கைவிட்டு அரசாங்கத்தில் இருந்து விலகிய 16 பேர் கூட்டு எதிர்க் கட்சியுடன் இணைய வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதாகவும் அவர்கள் எதிரணியில் தனித்து இயங்குவதன் மூலம் ரணில் தரப்பு பல மடையும் எனவும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கூட்டு எதிரணியில் இணைய இவர்களால் முடியாது போனால், தொடர்ந்தும் அமைச்சர்களாக பதவி வகிப்பது சிறந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அவரவர்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள்

"நான் உடம்பு சரியில்லேன்னு சொல்றேன்... "ஏன் என்ன ஏதுன்னு அந்த மனுஷன் ஒரு வார்த்தை கூடக் கேட்கலைங்க"

" என்னங்க நீங்க! அதுக்குள்ள என் பேரை மறந்துட்டீங்க? நல்லா இருக்குப் போங்க!"

கல்யாணத்துக்கு நல்லாத்தான் அழைச்சேன். மனுஷன் வாழ்த்துக் கூட அனுப்பலைங்க!

நான் ஓர் உதவி கேட்டேனே! அப்படியே மறந்துட்டீங்களே!

என்றெல்லாம் மற்றவர்களிடம் அங்கலாய்க்கிறவர்கள் பலர். இவற்றையெல்லாம் ஒரு பெரிய குற்றமாகவும் பிரச்சினையாகவும் எடுத்துக் கொண்டு தாங்களும் கவலைப்பட்டு மற்றவர்களையும் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள்.

இந்த நூற்றாண்டு மனிதர்கள் ரொம்பப் பாவம். எங்கே போனாலும் போட்டி, பிரச்சினை. வாழ்ந்து காலம் தள்ளுவதே வரவரப் பெரிய பிரச்சினையாகி வருகின்றது. வசதி இல்லாவிட்டாலும் பிரச்சினை. வசதி இருந்தால் அதில் வேறுவிதமான பிரச்சினை. அவதியான உலகில் அவரவர்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், எப்படியோ காலந்தள்ளவும் படாதபாடு படுகிறார்கள்.

அவரவர்களுடைய பிரச்சினைகளிலிருந்தே மீண்டு வரமுடியாத இந்தப் போராட்டத்தில் நமக்கு நம் விடயத்தில் அவர்கள் சரிவர நடந்து கொள்ளவில்லையே என் கிற மனக்குறை.

உண்மை என்னவென்றால் அவரவர்களே தங்கள் விடயத்தில் சரியாக நடந்து கொள்வதில்லை. இவற்றையெல்லாம் மீறிச் சிலர் நம்மிடம் நம் எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுத்து நடந்து கொள்கிறார்கள் என்றால் அது நம்மீது இருக்கும் பிரியம் தான் காரணம்.

நாம் எதிர்ப்பார்க்கும் அளவுக்கு ஒரு வர் நடந்து கொள்ளவில்லை என்றால் அவரைக் குறை சொல்வதன் மூலமோ கோபிப்பதன் மூலமோ அவரை மாற்றிவிட முடியாது என்கிற உணர்வு நமக்கு முதலில் வேண்டும்.

இத் தவறைத் தொடர்ந்து நாம் செய்து கொண்டிருந்தோமானால் அது நம் மன அமைதியைத் தான் அழிக்குமே தவிர அவர்களை மாற்றிவிடப் போவதில்லை. அதுமட்டுமல்ல இது கட்டுப்படியாகாத ஒரு முயற்சியும் கூட.

எழுதலை, பேசலை, பார்க்கலை, கேட்கலை, வைக்கலை, நிற்கலை என்றெல்லாம் மற்றவர்கள் மீது மனக்குறை பட்டுக் கொள்கிறவர்களுக்கு மேலும் ஒரு சில வார்த்தைகள்.

ஏன் இப்படி அவர்கள் நடந்து கொள்கிறார்கள்? அவர்களுக்கு இருக்கும் பிரச்சினை என்ன? அவற்றை எப்படி யாவது தீர்த்துவிட்டு அதன் பிறகு அவர்களை நம் வழிக்குக் கொண்டு வருவோம் என்று நாம் என்றேனும் முனைந்தது உண்டா?

நமக்கு நம் உலகம் பெரியது. மற்றவர்களுக்கு நம் உலகம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததா என்ன?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை ஆணைக்குழுவுடன் உடன்பாடு எதுவும் செய்யவில்லை

## இராணுவத் தளபதி நிராகரிப்பு



(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன், இலங்கை இராணுவம் இன்னமும் புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாத 49 பேர் கொண்ட இராணுவ அணியொன்று ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக லெபனானுக்கு கடந்த பெப்ரவரி மாதம் அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்தவாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அதில், ஐ.நா. மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை இராணுவம் மீறிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதுகுறித்து கொழும்பில் நேற்று முன்தினம் விளக்கமளித்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ்சேனநாயக்க,

"இலங்கை இராணுவம் இன்னமும் இது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செய்து கொள்ளவில்லை. இன்னமும்அது வரைவு நிலையில் தான் இருக்கிறது.

சரியான சொற்பதங்களும் நிபந்தனைகளும் புரிந்துணர்வு உடன்பாட்டில் உள்ளடக்கப்பட வேண் டும்.முழுமையாக சுதந்திரமான விசாரணைகளை நடத்த வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

நாங்கள் இந்த நிபந்தனைகளுக்கு இணங்கினோம். ஆனால் இப்போது நேரம் ஒரு பிரச்சினையாக இருக்கிறது.

இது 2017 டிசெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் மாலிக்கு எமது படையினரை அனுப்ப வேண்டியிருந்தது. அதனால் முன்னைய ஆய்வு நடைமுறைகளுக்கு அமைய அவர்கள் அனுப்பப்பட்டனர்.

நாம் முதலில் 200 பேரை அனுப்பினோம். அப்போது, ஐ.நா. மற்றும்ஏனைய அமைப்புகள், மனித உரிமை ஆணைக்குழுவின் இந்த ஆய்வு முறைகளின் ஊடாகவே படையினரை அனுப்ப வேண்டும் என்று கோரின.

இப்போது நாங்கள் இக்கட்டான நிலையில் இருக்கிறோம். மனித உரிமை ஆணைக்குழுவின் ஆய்வுகள் தொடங்கப்படும் நேரம் வரும் வரை, நாங்கள் அரச புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு, நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் மற்றும் ஏனைய முகவர் அமைப்புகளுடன் இணைந்து எமது படையினரை ஆய்வு செய்கிறோம். நாங்கள் மிகவும் இறுக்கமான ஆய்வு நடைமுறைகளைப் பின் பற்றுகிறோம்.

வெளிநாடுகளுக்கு அமைதிப்படையில் பணியாற்ற அனுப் பப்படுவதற்கு முன்னதாக படையினரின் மனித உரிமை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் முழுமையாக ஒத்துழைப்பதற்கு இராணுவம் முயற்சிக்கிறது. ஏனென்றால், அவர்கள் எந்தத் தவறும் செய்த குற்றவாளிகள் அல்ல" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மலையகத்தில் களைகட்டிய புதுவருட கொண்டாட்டங்கள்



(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டை மலையக மக்கள் சிறப்பாகக் கொண்டாடினர்.

மலர்ந்திருக்கும் புதுவருடத்தை மிக மகிழ்ச்சிகரமாக ஆலய வழிபாடுகளுடன் வீட்டு வழிபாடுகளையும் நடத்திக் கொண்டாடினர்.

பெருந்தோட்ட பகுதி ஆலயங்கள் மற்றும் நகர்ப்புற ஆலயங்களில் மருத்துநீர் பெற்று சுபவேளையில் தலையில் தேய்த்து குளித்து நேற்று புத்தாண்டு தினத்திற்குரிய நிறத்திற்கு ஏற்ற புத்தாடையை அணிந்து ஆலய வழிபாடுகளிலும். ஏனைய சமய வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

புத்தாண்டை முன்னிட்டு ஹற்றன் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் நேற்று விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. இதில் அதிகளவிலான பக்தர்கள்கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். (இ-7)



கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும், சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட பன்னிரு பெண்களும், விருந்தினர்களும், நிலைய நிர்வாகத்தினரையும் படத்தில் காணலாம்.

# நாடாளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை

## ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் இல்லை என்று ஜனாதிபதியின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் மே 8ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தை முடக்கும் அரசிதழ் அறிவிப்பு ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட போதே ஒஸ்ரின் பெர்னாண்டோ, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நோக்கம் ஜனாதிபதிக்கு கிடையாது என்று தெரிவித்தார்.

"1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 70 (3) பிரிவு, நாடாளுமன்றத்தை முடக்கிவிட்டு, கலைப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது.

எனினும், அவ்வாறான நோக்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கிடையாது.

இதற்கு முன்னரும் பதவியில் இருந்த ஜனாதிபதிகள் கூட பலமுறை நாடாளுமன்றத்தை முடக்கியுள்ளனர்.

அரசியலமைப்பின் 70 (1) பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தை முடக்கியுள்ள ஜனாதிபதி நாடாளுமன்றக் கூட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் நாளையும் அரசிதழில் வெளியிட்டுள்ளார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ-7)

# நல்லாட்சி அரசாங்கத்திற்கு புதிய குத்தகை வாழ்க்கை

(கொழும்பு)

தமது சொந்த கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களை கடந்த அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்காமல் இருக்க ஜனாதிபதி அனுமதித்தமையானது, அவரின் அசாதாரணமான ஜனநாயக பயிற்சியாகும் என கொழும்பு ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா யோசனைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களுடன் ஒன்றாக செயற்பட முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு முன்னதாக தீர்மானம் எடுத்திருந்தது.

இந்த தீர்மானத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்திற்கு பதிலாக தமது அமைச்சர்களை அமைச்சரவையில் கலந்து கொள்ளாமல் செய்தமை பழிக்கு பழி என்ற அடிப்படையில் ஜனாதிபதிக்கு போதுமான செயலாக அமைந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்துக்கு புதிய் குத்தகை வாழ்க்கை நீடிப்பு கிடைத்துள்ளது. எனினும் கண்ணிவெடிகளை அது கடந்து செல்ல வேண்டியுள்ளது. எரிபொருள் விலைகளை உடனடியாக அதிகரிக்க வேண்டியுள்ளமையும் இதில் ஒரு கண்ணிவெடியாகும்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டாவது மத்தியக் குழு கூட்டத்தை புத்திசாலித்தனமாக தவிர்த்துள்ளார்.

இது அந்த கட்சியின் உறுப்பினர்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் தொடர்ந்தும் இயங்குவதா? அல்லது விலகுவதா? என்ற தீர்மானத்தை பிற்போடுவதற்கு உதவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மறுபுறத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பலமான நிலையை அடைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# பத்தாயிரம் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பொலிஸார் அதிரடி

(கொழும்பு)

இலங்கைமுழுவதும்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது போக்குவரத்து சட்டங்களை மீறிய 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாரதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய பத்தாயிரத்து 147 சாரதிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொலிஸார் தயாராகி உள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களிலேயே பத்தாயிரத்து 147 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்த சந்தர்ப்பங்களில் 233 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிக விபத்துக்கள் குடிபோதையில் வாகனம் ஓட்டியமையினால் ஏற்பட்டதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் 679 மில்லியன் ரூபா செலவில் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள்

## செயலாளர் சிவஞானசோதி தகவல்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சர் என்ற வகையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நல்லிணக்கத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களான பாதைகள் அமைத்தல், கல்வி மற்றும் சுகாதாரத்திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மீன்பிடித்துறைசார் திட்டங்கள் மற்றும் வாழ்வாராத திட்டங்களை முன்னெடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்ட பிரேரணைக்கு அமைவாக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகங்களுடன் கலந்துரையாடி முதலாம் காலாண்டில் உடனடியாகவும் உயர்வானதுமான பலா பலன்களை தரக்கூடியதுமான கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் சாவகச் சேரியில் 100 மில்லியன் ரூபா செலவில் பொருளாதார மத்திய நிலையம் அமைத்தல், நெடுந்தீவில் 20 மில்லியன் ரூபா செலவில் பனைசார் உணவு பதனிடும் நிலையத்தினை அமைத்தல், அராலி வடக்கு முருக மூர் த்தி ஆலய வீதியினை 5.2 மில்லியன் ரூபா செலவில் அமைத்தல், பலாலி வடக்கு, பொலிகண்டி கிழக்கு, அராலி வடக்கு, அராலி மத்தி, ஊரணி ஆகிய பிரதேசங்களில் 288 மில்லியன் ரூபா செலவில் மீன்பிடி இறங்குதுறைகளை அபிவிருத்தி செய்தல், கரணவாய் வேதாரணிய பாடசாலையில் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் 16 மில்லியன் ரூபா கிரயத்திலும் திராட்சைப் பழ உற்பத்தியை மேம்படுத்துவதற்கு ரூபா 7.5 மில்லியனும்பாசையூரில் மீன்பிடி வலைகளை பின்னும் மண்டபம் 6 மில்லியன் ரூபா செலவிலும் கடற்றொழில் வாழ்வாதார உதவிகள் 10.5 மில்லியன் ரூபாவிலும் நயினாதீவில் பயணிகள் இறங்குதுறை 30மில்லியன் ரூபா செலவிலும் கரவெட்டியில் பிரதேச வைத்தி யசாலையில் 25 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடி நோயாளர் விடுதி போன்ற செயற்றிட்டங்கள் முதலாம் காலாண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு, மன்னார் நகரம் போன்றவற்றில் இறால் நீர்த்தாங்கி உள்ளடங்கலாக நீர்வழங்கல் வசதிகள் வடக்காடு, மாந்தை கிழக்கு, நந்தகுமாரன் நகர், துணுக்காய், கிச்சிரபுரம், மரிடைம்பற்று, நீராவிபிட்டி-செல்வபுரம், ஒட்டுசுட்டான் மற்றும் வெலி ஓயாவில் இசுறுபுரம், பண்டுளுபுர, சங்கபோபுர பிர தேசங்களில் வழங்குவதற்காக 35 மில்லியன் ரூபாவும் முல் லைத்தீவு வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் 17 மில்லியன் ரூபாவும் முதலாம் காலாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மற வன்குளம் வீதி 24 மில்லியன் ரூபா செலவிலும், செங்கல் பட்டிகுளம், கருக்கைக்குளம், மத்திய மடு, சின்னபூவரசன் குளம் ஆகிய பிரதேசங்களில் நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு, பிராந்திய சுகாதார பணிமனைக்கு மருத்துவ உபகரணங்கள் 24 மில்லியன் ரூபா செலவிலும், மகிழகுளம் பெண்கள் பாடசாலைக்கு ஆய்வுகூட வசதிகளும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்குவதற்கு முதலாம் காலாண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் மகாருக் கிராம குள வீதி, வெல்கம விகாரையிலிருந்து பிரதான வீதிவரையும் உள்ள பிரதான வீதிகளை புனரமைத்தல் நெலுங்கமவில் இருந்து சேருவில ரஜமகா விகாரை வரையுமான உள்ளக வீதிகளை புனரமைப்பதற்கான 34 மில் லியன் ரூபா மற்றும் தென்னை மரவாடி ஆசிரியர் விடுதி அமைப்பதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 20 மில்லியன் ரூபா செலவில் பனைசார் உணவு பதனிடும் நிலையம் அமைக்கப்படவுள்ளது. மேலும் வீதிகள் அமைப்பதற்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இக் கருத்திட்டங்கள் உள்ளக இடம்பெயர்ந்தவர்கள், தாய கம் திரும்பும் அகதிகள், பெண் தலைமத்துவ குடும்பங்கள், மாற்றுதிறனாளிகள், புனர் வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்கள் போன்றவர்களின் வாழ்வாதாரத்திற்கும் பொருளாதார சமூக மேம்பாட்டுக்கும் வழி வகுக்கும்.

ஆற்றுப்படுத்தல் மற்றும் இழப்பீடுகளை வழங்குவதன் மூலம் பின்னடைவுகளை அடைந்த பிரதேசங்களை முன்னேற்றம் அடையச் செய்வதன் மூலம் நல்லிணக்கம் மற்றும் நிலைபேறான சமாதானத்தை அடைய முடியுமென தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# பட்டதாரிகளுக்கான முக்கிய அறிவித்தல்



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகளை பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 21

பரமசாமி பஞ்சாட்சரம்

மூன்றாம் நாள் 04.08.14

யாத்திரை ஆரம்பம்

இந்த நாள் இனிய நாள். வாழ்க்கையில் என்றும் நினைத்து மகிழும் நல்ல நாள். பெற்றோரை நினைத்து, இறைவனை மனதாலே துதித்து, "இறைவா எங்களைக் கயிலை மலைக்கு அனுப்பி வைக்கின்றாய். இது நிறைவுபெற உன் அருள் வேண்டும்" என வணங்கிப் புனித பயணத்தை அன்று காலை ஆரம்பித்தோம்.

நேபாளத்தை ஒரு "தேவ பூமி" என்று சொல்வார்கள். அது அத்தனை எழில் நிறைந்த பிரதேசம். மலைகளும் மலைச் சரிவில் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் மரங்களும் பச்சைப்பசேல் என்ற இயற்கைக் காட்சிகளும் வழி எல்லாம் ஆறுகள் ஓடிக் கொண்டேயிருக்கும் காட்சிகளும், மலையில் ஊற்றெடுத்து ஓடும் அருவிகளும், நீர் வீழ்ச்சிகளும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

நல்ல சுவாத்தியமாகக் காணப்படும் இடமாதலால் இங்கே சோளம், கோதுமை ஆகிய தானியங்கள் பயிர் செய்யப்படுகின்றதைக் காணலாம்.

சுமார் 50 கி.மீ. தூரம் சென்றதும் நிலச்சரிவு ஏற்பட்டு பாதையும் ஆறும் ஒரு கி.மீ. மூடப்பட்ட இடம் வந்தது. நாம் அந்த இடத்திலிருந்து ஹெலியில் (Helocopter) பயணத்தைத் தொடர்ந்தோம்.


நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களைத் தாண்டி நேபாள எல்லைக் கிராமமான "கொடாரி" யில் உள்ள ஹெலி இறங்குமிடத்திற்கு வந்து அங்கு உள்ள "கயிலாஸ்-மானசரோவர்" என்னும் விடுதியிலே தங்கினோம்.

மூன்றாம் நாள்

05.08.14 கொடாரி

செவ்வாய்க்கிழமை இரவு "கயிலாஸ்-மானசரோவர்" விடுதியிலே தங்கினோம். இந்த இடத்தின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 2050மீ ஆகும். நேபாளத்தின் எல்லைக்கு வந்த நாங்கள் அடுத்த நாள் சீனாவின் எல்லைக்குள் நுழைய வேண்டும்.

நேபாளத்தையும் சீனாவையும் "போடே கோசி" என்னும் ஆற்றின் கிளை ஒன்று பிரிக்கின்றது. நேபாளத்தைச் சார்ந்த "கொடாரி" (Kodari) என்னும் கிராமத்தையும், திபெத்தைச் சார்ந்த ஜாங்மூ என்னும் இடத்தையும் இணைக்கும் பாலத்தை "நட்புப் பாலம்" (Friendly Bridge) என்று அழைக்கின்றார்கள். இப் பாலத்தின் ஒரு பக்கத்தில் நேபாள விசா அலுவலகமும், அடுத்த பக்கத்தில் சீன விசா அலுவலகமும் இருக்கின்றன.



நான்காம் நாள்

05.08.14 ஜாங்மூ

அன்று "கயிலாஸ்-மானசரோவர்" விடுதியிலிருந்து நாங்கள் 2கி.மீ தூரம் "நட்புப் பாலம்" (Friendly Bridge) வரை நடந்து செல்லவேண்டும். எமது சிறிய பைகளைத் தூக்கிவரச் சிறுவர்கள் பலர் விடுதி வாசலிலே காத்திருந்தனர். சிலர் தங்கள் சிறுபைகளைச் சிறுவர்களிடம் கொடுத்து அவர்களுடன் நடந்து வந்தனர். நாங்களும் நட்புப் பாலம் வரை நடந்தோம்.

நட்புப் பாலத்தின் நடுவில் சீன இராணுவத்தினர் காவல் புரிகின்றனர். அங்குள்ள இராணுவ அதிகாரியின் அனுமதியுடன் சீன விசா அலுவலகம் சென்று, விசா எடுத்து ஜாங்மூ என்னும் திபெத்திலுள்ள நகரத்திற்கு வந்தோம்.

இங்கு "டொலர்"களைச் சீன நாணயமாக "யுவான்" ஆக மாற்றித் தருவதற்குச் சீனப் பெண்களும், ஏஜன்ட் இடைத்தரகர்களும் வந்து கேட்டபடி இருந்தார்கள், ஏமாற்றவும் முயற்சி செய்வதாகக் காணப்பட்டது. நாங்கள் "எக்கோரெக்"கிடம் காத்மண்டுவிலே தேவையான "யுவான்"களை மாற்றியது நல்லது என்பதை உணர்ந்தோம். அத்துடன் திபெத் நாட்டின் பிரகாரம் எங்கள் கடிகாரங்களை இரண்டு மணித்தியாலங்கள் கூட்டி விட்டுக் கொண்டோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனை பிடிக்கும்

## நடிகர் அஷீம் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை மிகவும் பிடிக்கும் என தமிழக சின்னத்திரை நடிகர் மொஹமட் அஷீம் தெரிவித்துள்ளார்.

தான் பிறப்பால் ஒரு முஸ்லிமாக இருந்தாலும் தமிழ் மீது அதிக பற்று உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நேர்காணலில் உங்களுக்கு மிகவும் பிடித்த புரட்சியாளர் யார் என கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அஷீம் வீழ்ந்தாலும் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவன் பிரபாகரனை பிடிக்கும் என்றும் கூறியுள்ளார்.



மேலும் தமிழக அரசியல்வாதிகளான கலைஞர், சீமான், திருமாவளவன் போன்றோரையும் பிடிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சின்னத்திரை உலகில் அஷீம் மிகவும் பிரபலமடைந்து வருகிறார்.


அவர் நடித்த பிரியமானவளே, பகல் நிலவு போன்ற மெகா தொடர்கள் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலையக பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் நியமனம்

(கொழும்பு)

அடுத்த மாதம் மலையகத்தில் உள்ள பட்டதாரிகளுக்கு அரச துறையில் நியமனம் வழங்குவதற்கான நட்வடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் அதற்கான அங்கீகாரத்தினை முதலமைச்சர் வழங்கியிருப்பதாகவும் மத்திய மாகாண தமிழ்க்கல்வியமைச்சர் எம்.ரமேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் மலையகத்தில் 800 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக்கொடுத்ததாகவும் ஏனைய அமைச்சில் 1000 இற்கும் மேற்பட்டவர்களுக்கு அரச வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்திருப்பதாகவும் நேற்று முன்தினம் கூட பல வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்ததாகவும் தெரிவித்த அவர், கடந்த 3 ஆண்டு காலப் பகுதியில் மத்திய மாகாணத்தில் தமிழ்க்கல்வி பாரிய வளர்ச்சியினைக்கண்டுள்ளதாகவும் இவ்வருடம் அதிக பெறுபேறுகளைப்பெற்று பல கல்வி வலயங்கள் முன்னணியில் திகழ்வதாகவும் இதற்கு காரணம் தான் அரசியல் பாராது கல்விக்கு முக்கியத்துமளித்து செயற்பட்டதனே எனவும் தெரிவித்தார்.



டயகம கிழக்கு சௌமிய மூர்த்தி தொண்டமான் பாடசாலையில் சிகரம் தொடுவோம் எனும் தொனிப்பொருளில் பாடசாலையில் கல்விகற்று பல்வேறு துறையில் சாதனை படைத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் நடராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் பாடசாலையில் கல்வி கற்று பல்வேறு நிறுவனங்களில் தொழில்புரியும் நபர்கள் மற்றும் பாடசாலையில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலை வரலாற்று நூல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (இ-7)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய நவோதயா மக்கள் முன்னணி

(கொழும்பு)

நீண்டகாலமாக தடுத்து வக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பிறந்திருக்கும் விளம்பி புதுவருடத்திலாவது விடுதலை செய்வதற்கு ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் முன்வர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



கொழும்பை தலைமையாகக் கொண்டு இயங்கும் நவோதயா மக்கள் முன்னணி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

நவோதயா மக்கள் முன்னணி சார்பாக சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு நேற்றுச் சனிக்கிழமை கொழும்பு செட்டியார் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் விசேட பூஜை நடைபெற்றது.

இந்தப் பூஜையில் நவோதயா மக்கள் முன்னணியின் தலைவர் எஸ்.கே கிருஷ்ணா, அந்த அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகராக உள்ள கங்கைவேனியன், கட்சியின் பொதுச் செயலாளர், ஊடக இணைப்பாளர் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டு ஆசிபெற்றுக் கொண்டனர்.

இதனையடுத்து ஆலயத்திற்கு முன்னால்நவோதயா மக்கள் முன்னணி சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நவோதயா மக்கள் முன்னணியின் சிரேஷ்ட ஆலோசகரான கங்கைவேனியன், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தினார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1384

Search for people, places and things Nagendram Home

### சஜின்



பொண்ணுங்க
நம்மள
பைக்ல
ஓவர் டேக்
பண்ணும்
போது வரும்
கோபம்...
படிப்புல
ஓவர் டேக்
பண்ணும் போது
வரமாட்டேங்குது!!

### சாருக்

கருவறையில் இருந்து இறங்கி கல்லறையை நோக்கி நடந்து செல்லும் தூரம்தான் வாழ்க்கை



### சந்தோஷ்

வாழ்க்கையும் பாலும் ஒன்னுதான் கவனிக்காம விட்டுட்டா பொங்கிடும்!



### சாம்பவி

நான்கு வயதில் சண்டைபோட்டோம்
அம்மா என்னுடையது... அப்பா என்னுடையது



நாற்பது வயதில் சண்டை போடுகிறோம்
அம்மா உன்னுடையது! அப்பா உன்னுடையது!

### சாருகேசி

சில நேரங்களில் பின் வைத்த காலும் வெற்றி தரும்



### சம்யுக்தா

மூனுமணி நேரம் படத்தில நடிக்கிற ஹீரோ உங்களுக்கு பெருசுனா



தினமும் மூனு வேளை சாப்பாடு போடுற விவ்சாயி எங்களுக்குப் பெருசுதான்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் மனிதவுரிமைச் செயற்பாடுகளை பலவீனப்படுத்தும் முயற்சியில் ரஷ்யா, சீனா

அனைத்துலக நாடுகளில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருவதாக இராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இருநாடுகளும்இணைந்து மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களுக்கான நிதி வழங்கலைத் தடுப்பதற்காக 5ஆவது ஆணைக்குழு எனக் கூறப்படும் ஐ.நா. சபையின் வரவு-செலவுத் திட்டக் குழுவைப் பயன்படுத்தியுள்ளன.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான உயர் அதிகாரிக்கான நிதியை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இவ்விரு நாடுகளும் மேற்கொண்டுள்ளன.

2009இல் இலங்கையில் இடம்பெற்ற மிக மோசமான படுகொலைகள் இடம்பெறாமல் தடுப்பதில் அல்லது இது தொடர்பாக இலங்கைக்கு ஐ.நா. எச்சரிக்கை விடுக்கத் தவறியதைத் தொடர்ந்து 2014இல் ஐ.நா. மனித உரிமைகள் முன்னணி ஆரம்பிக்கப்பட்டது.

மனித உரிமைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தால் உயர் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் சீனா மற்றும் ரஷ்யாவின் எதிர்ப்பைத் தொடர்ந்து இவ்வாண்டு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான உயர் பதவி நிலைக்கான நிதியை ஐ.நாவின் 5ஆவது ஆணைக்குழு நிறுத்தியுள்ளது.

ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்திற்கான நிதியும் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டு தான் தனது பதவியிலிருந்து விலகப் போவதாகவும் தொடர்ந்தும் இதில் பதவி வகிக்க விரும்பவில்லை எனவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அனைத்துலக சமூகத்தின் ஆதரவானது குறைவாக உள்ளதால், இது தனது பணியைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தடையாக உள்ளதாகவும் மனித உரிமைகளுக்கான தற்போதைய உயர் ஆணையாளர் செயிட் ராட் ஹுசேன் தனது பணியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சிரியாவில் வாழும் பொதுமக்களின் அவல நிலை தொடர்பாக செயிட் உரையாற்றியிருந்தார். இவர் தனது உரையின் ஆரம்பத்தில், பாதுகாப்புச் சபையானது மனித உரிமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குப் பொருத்தமான தளம் அல்ல என்பதால் இங்கு தான் உரையாற்றுவதைத் தடுப்பதற்காக ரஷ்யாவால் வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டதாக செயிட் தெரிவித்திருந்தார்.



'ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது ஆணைக்குழுவானது மனித உரிமைகள் தொடர்பாக விவாதிப்பதற்கான ஒரு களமாக மாறியுள்ளது' என மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்கான ஐ.நா. இயக்குநர் லூயிஸ் சார்பொன்னியு தெரிவித்தார்.

'சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் மனித உரிமைகள் என்கின்ற பெயர்களைக் கொண்ட அமைப்புக்களுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியுள்ளன' என லூயிஸ் சார்பொன்னியு குறிப்பிட்டார்.

'பாதுகாப்புச் சபையில் மனித உரிமைச் செயற்பாடுகளுக்கான ஆணையை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அதன் பின்னர் ரஷ்யா மற்றும் சீனா இதற்கான நிதியை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும். மனித உரிமைகளுக்கு பேச்சளவில் மட்டும் ஆதரவளிக்கும் நாடுகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க மாட்டார்கள். ஆகவே ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகள் வெற்றி பெறுவதற்கு நாம் அனுமதிக்கப் போகின்றோமா?' என சார்பொன்னியு கேள்வி எழுப்பினார்.

'சீனா தற்போது ஐ.நாவில் உண்மையான அரசியல் இயங்குவிசையைக் கொண்டுள்ளது. அமெரிக்காவிற்கு அடுத்ததாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகளவான நிதிப் பங்களிப்பை மேற்கொள்ளும் இரண்டாவது நாடாக சீனா விளங்குகிறது. ஐ.நா. மனித உரிமைச் செயற்பாடுகளுக்கான தனது ஆதரவை சீனா குறைத்து வருகிறது.

சீனா, ஐ.நா. அமைப்புக்களில் தனிப்பட்ட உரிமைகளை விட 'அமைதியை' அதிகம் வலியுறுத்தி வருகிறது. பெரும்பாலான நாடுகள் தாம் கேட்பதையே அதிகம் விரும்புகின்றன' என வெளியுறவுக் கோட்பாடுகளுக்கான ஐரோப்பிய சபைக்கான ஐ.நா. வல்லுநர் ஒருவர் தெரிவித்தார்.

சீனாவால் மனித உரிமைச் செயற்பாடுகளுக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புக்கள் காண்பிக்கப்படுவதால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் செயற்பாடுகள் வலுவற்ற நிலைக்குத் தள்ளப்படுவதாக மேற்குலக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் தனது நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவாக வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக சீனாவால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது ஐ.நாவில் சீனாவிற்கு மேலும் பலத்தைச் சேர்த்துள்ளது.

'ஐ.நாவின் 5ஆவது ஆணைக்குழுவானது மிக முக்கிய விவாதக்களமாக உள்ளது. எமது குழுவினர் மனித உரிமை விடயங்களை முன்வைப்பதற்கு மிகவும் போராடுகின்றனர். வரி வழங்குநருக்கு சிறந்த பெறுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

ஆனால் அதேவேளையில் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைச் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதாகவும் மையப்புள்ளியாகவும் உள்ளதால் இதற்கான நிதியைக் குறைக்கக் கூடாது என்பது முக்கியமானதாகும்' என இராஜதந்திரி மேலும் தெரிவித்தார்.

வழிமூலம் - **The guardian**
ஆங்கிலத்தில் - **Julian Borger**
மொழியாக்கம் - நித்தியபாரதி

# வளமான தேசத்தைக் கட்டியெழுப்பும் ஆண்டாக புத்தாண்டு அமையட்டும்

## வாழ்த்துச் செய்தியில் பிரதமர் வலியுறுத்து

(கொழும்பு)

வளமான தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு சமாதானம், நல்லிணக்கம், சகவாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் மகிழ்ச்சியான இனிய புத்தாண்டாக அமையட்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது புத்தாண்டு வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.



சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இன, மத, கட்சி, நிற பேதங்களை ஒதுக்கிவிட்டு எமது நாட்டிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடும் முக்கியமான தேசிய நிகழ்வு சிங்கள, தமிழ் புத்தாண்டாகும்.

இயற்கை மற்றும் மனிதனுக்கிடையே காணப்படும் நெருக்கமான உறவினை அர்த்தமுள்ளதாக மாற்றியமைத்து, சூரியனை முதலாகக் கொண்ட இயற்கைக்கு நன்றிக் கடன் செலுத்தும் தேசிய ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை மேம்படுத்தும் சூரியத் திருவிழாவானது, புதிய எண்ணங்களுடனும் திட சங்கற்பத்துடனும் வாழ்வினைப் புதுப்பித்துக் கொள்வதற்குக் கிடைக்கும் அருமையான சந்தர்ப்பமாகும்.

இன, மத, கட்சி, நிற பேதங்களை ஒதுக்கி விட்டு எமது நாட்டிலுள்ள அனைவரும்ஒன்றிணைந்து கொண்டாடும்முக்கியமான தேசிய நிகழ்வு சிங்கள, தமிழ் புத்தாண்டாகும். இனம், மதம், அந்தஸ்து எதுவாயினும் கலாசாரப் பல்வகைமையை ஏற்றுக் கொண்டு, அதற்கு மதிப்பளித்து அனைவருடனும் சந்தோசமாகவும் சமாதானத்துடனும் வாழ்வதற்கு இந்தப் புத்தாண்டைப் புதியதோர் ஆரம்பமாக மாற்றியமைப்போம்.

நீண்டகாலமாக இந்த நாட்டு மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் புத்தாண்டுப் பழக்கவழக்கங்களில் அர்த்தத்துடன் பங்கு கொண்டு அந்தக் கலாசார உரிமையை எமது எதிர்கால சந்ததியினருக்குப் பரிசளிக்கவும் இதனை சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்வோம்.

வளமான தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு சமாதானம், நல்லிணக்கம், சகவாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும், மகிழ்ச்சியான இனிய புத்தாண்டாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என பிரதமரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# வெளிநாடுகளுக்கு இணையாக இலங்கையில் புதிய நடைமுறை

(கொழும்பு)

இலங்கையில் ரயில் மற்றும் பேருந்துகளில் பயணிப்போருக்கு புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் அமுலிலுள்ள பணத்திற்கு பதிலாக ஸ்மார்ட் அட்டையை பயன்படுத்தும் நடைமுறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து, தனியார் பேருந்து மற்றும் ரயிலில் பயணிக்கக் கூடிய பயணிகளுக்கு இலத்திரனியல் அட்டை ஒன்றை அறிமுகப்படுத்தி வைப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

டச் கார்ட் என பெயரிடப்பட்டுள்ள இந்த ஸ்மார்ட் அட்டையை கொள்வனவு செய்யும் பயணிகள் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளிலும், தனியார் பேருந்துகளிலும், ரயிலிலும் பயணிக்க முடியும்.

இந்த அட்டையை பயணிகள் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும். பேருந்து அல்லது ரயிலில் பயணிக்கும் போது அட்டையில் அதற்கான கட்டணம் குறைத்துக் கொள்ளப்படும்.

இந்த டச் அட்டை பயன்படுத்துவதனால் மீதிப் பணம் கிடைக்காமை போன்ற சிரமங்களைத் தவிர்க்க முடியும் என குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

# எரிபொருள் விலைப்பொறிமுறை குறித்து புதிய அமைச்சரவைப் பத்திரம் தயாரிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பிலான விலைப் பொறிமுறைமை எதிர்வரும் மே மாதம் முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

உலக சந்தையில் எரி பொருளுக்கான விலை ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ற வகையில் இலங்கையில் எரி பொருளுக்கான விலைகளை நிர்ணயம் செய்யும் நோக்கில் இந்த பொறிமுறைமை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

நிதி அமைச்சரின் உத்தரவின் பேரில் விலைப் பொறிமுறைமை குறித்த அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மே மாதம் முதல் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்கு கட்டம் கட்டமாக விலை நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிபந்தனைகளில் ஒன்றாகவும் இந்த விலைப் பொறிமுறைமை பற்றி பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மின்சாரக் கட்டணங்களுக்கான விலைப் பொறிமுறைமை பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–151

## சித்திரைப் புத்தாண்டே! வரம் தாராயோ?



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள்
எம்மினிய உறவுகளே!

சிங்கள, தமிழ் புத்தாண்டில் அனைவருக்கும் அனைத்தும் கிடைத்திட வளமாக வாழ்ந்திட வாழ்த்துக்கள். நமது நாடு அழகிய ஒரு தீவு. பல இனங்களும் ஒன்றுபட்டு வாழ வசதியிருந்தும் அமைதியின்றி அவ்வப் போது முரண்படுவதும் அடிபடுவதுமாக செய்திகளை கொடுத்துக் கொண்டிருக்கின் றோம்.

ஒற்றுமையின் பலத்தை அனைவரும் உணர்ந்த பின்னும் அதனை ஓரங்கட்டிவிட்டு தத்தமது பலத்தை பிரயோகிக்க முயன்று எனத் தெரியாமலேயே குழம்பி விட்டிருக்கின்றனர். இதிலும் அதிசயம் என்னவென்றால் சூரசங்காரத்திலும் இரு வேறு நேரங்கள். எது சரி எது பிழை? உமக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளும், விதண்டாவாதம் வேண்டாம் என்றார் பொறுப்புள்ள பெரியவர். அவரின் கூற்றும் நியாயம்தான். எமக்கு எது தேவையோ அதையே எடுத்துக்கொள்வோம். வீணான விதண்டாவாதம் தேவையில்லையே.

இப்புத்தாண்டில் புதுமைகளும் நடைபெற்றிருக்கின்றன. யாழ்ப்பாண நூலகத்தில் “விவசாயி” என்னும் மாதாந்த சஞ்சிகை புதுவரவாகியிருந்து வரும் தாயகத்தின் கலைக் களஞ்சியமாக விவசாயி அமையுமென எதிர்பார்ப்போம். வீட்டுக்கொரு சஞ்சிகையை வாங்கி வீட்டிலுள்ள அனைவரும் நேரம் கிடைக்கும் போது வாசிப்பதற்கென வைத்திருப்போமா? வாசிக்கும் பழக்கம் அருகிவரும் இக்காலகட்டத்தில் இவ்வாறான சஞ்சிகையை நாம் மனதார வாங்கி இந்த நல்ல கைங்கரியத்திற்கு ஊக்கமளிப்போமா?

சித்திரையாள் புத்தாடை அணிந்து புதுக்கோலம் கொண்டாலும் மக்களின் மனதில் மகிழ்ச்சியில்லை. காலம் தப்பித்தது ஒருபக்கமிருக்க மறுபக்கத்தில் காவிரி நீருக்காக இடர்கால நிலைபோல பயிர்ச் செய்கையும் எதிர்பார்த்த ஆதாயத்தை தரவில்லை என மக்கள் அங்கலாய்க்கின்றனர். என்ன பயிர்செய்தால் இழந்ததை எடுக்கலாம் என பலரும் முயற்சிப்பது தெரிகின்றது.

இந்நிலையில் பிறந்திருக்கும் புத்தாண்டு மக்களுக்கு பல நல்ல செய்திகளை கொண்டு வரும் என இன்னும் நம்பிக்கையுடன் வழிமேல் விழி வைத்து பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். மக்களின் வாழ்வாதாரம் செழிக்க மழை தேவையானளவு பெய்து அனைவரினதும் மனதைக் குளிர்மைப்படுத்தும்என நம்புவோமாக.

உருவானதால் மக்கள் மீண்டும் மாற்றங்களை தற்போது காணும் பலரும் வருகின்ற தேர்தலில் மாற்றங்களை உணரத் தலைப் படுவர்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 166

கொண்டிருக்கின்றோம்.

ஆனால் இயற்கை நாமெல்லோரும் நல்வாழ்வு வாழத்தான் இத்துணை வசதிகளை தந்திருக்கின்றதே தவிர எமக்குள் அடிபட்டுக் கொண்டிருப்பதற்கல்ல. போகிற போக்கில் எம்மைப் பார்த்து இயற்கையிலும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி வந்துவிட்டதோ எனத் தோன்றுகின்றது. ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து... இயற்கையையும் மாற்ற முயன்றிருக்கின்றார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

இந்த நாடு சமாதானக் காற்றை சுவாசிக்கத் தொடங்கி முழுமையாக 9 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் இன்னும் பல விடயங்களுக்கு விடைதெரியாமலேயே மக்கள் அலைக்கழிந்து கொண்டிருக்கின்றார்கள். போரின் வடு இன்னமும் ஆறிவிடவில்லை.

உறவுகளுக்காக தினம் தினம் உறவுகள் உழன்று கொண்டிருப்பது இன்னமும் தொடர்கின்றது. உறவுகளை, உணர்வுகளை இழந்தவர்களுக்கே அதன் தாக்கம் புரியும். இருப்பினும் அவர்களின் துக்கங்களில் பங்கெடுப்பதோடு அவர்களுக்கு ஆறுதலும் சொல்லவாவது நாம் முயற்சி செய்வோம்.

மறுபக்கத்தில் தமிழர் நாம் பஞ்சாங்கத்திலேயே வாக்கியம், திருக்கணிதம் என முரண்பட்டிருக்கும் நிலையை என்னவென்பது. ஏழை எளியவர்கள் மட்டுமல்ல சமயிகளும் எதைப் பின்பற்றுவது கின்றது. பல சுவையான பாரம்பரிய இயற்கைவழி விவசாயத்தை மையப்படுத்திய




வரவாக இச்சஞ்சிகை பரிணாமம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டத்தக்கதுமாகும். 2013 ஆம் ஆண்டு இயற்கையெய்திய இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்களின் அடியொற்றி விவசாயம் தொடர்பான தகவல்கள் அடங்கிய மாதாந்த சஞ்சிகையாக உருவெடுத்திருக்கும் இச்சஞ்சிகை எல்லோருக்கும் பயன்தரும் விடயங்களை சுமந்து மாதாமாதம் அனைவரினதும் கைகளில் கிடைக்கும் என நம்புவோமாக. விவசாயி மாதாந்த சஞ்சிகையை 551 ஏ, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலும் 021 492 7780 என்னும் தொலைபேசி எண்ணினூடாக தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தகவல்கள் பல[illegible]

தாய்மண்ணில் போராட்டங்களும் கோசங்களுமாக தமிழகம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

இயற்கையின் கொடையான நீரினை இல்லையென கைவிரிக்க எவருக்கும் உரிமையில்லை. ஆனால் விசித்திரமானதாக இது நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. இங்கேயும் இயற்கையன்னை மனம் நொந்திருக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. மழை அவ்வப்போது மக்களுக்கு நினைவூட்டுவதாக ஆங்காங்கே துளியாகி விழுந்து வரும் வழியிலேயே ஆவியாகியும் விடுகின்றது.

மழை ஓங்கியடித்து இந்த வெயிலை குறைக்காதா? என பலரும் ஏங்கியிருக்கும் நிலையெழுந்திருக்கின்றது. கால நிலை மாற்றத்தினால் மழை பெய்வதும் பொய்த்திருக்கின்றது. எளியவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குரியதாகி [illegible]

வெயில் தணிந்து மழை பெய்தால் விவசாயம் செழிக்கும். பயிர் செழித்தால் குடியுயரும். குடியுயர்ந்தால் கோன் உயர்வான். இந்த விளம்பி புத்தாண்டின் வரவு அனைத்து மக்களுக்கும் நல்வரவாக இருக்க இயற்கையை நாம் வேண்டிக்கொள்வோம். உலகிலுள்ள உயிர்கள் சிறந்து விளங்க, அனைவருக்கும் உணவு, உடை இன்னும் ஏனைய அத்தியாவசியமான பொன்பொருள் கிடைக்க வாழ்த்துக்கள்.

நஞ்சற்ற விவசாயம் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது அதனை குறைகூறியவர்கள் தற்போது நடைமுறைப்படுத்த தொடங்கிவிட்டார்கள்.

இந்த மாற்றம் சுகமான தேகாரோக்கியமானதும் கூட. நஞ்சுகளாக கருதப்பட்ட பீடைநாசினிகளின் விற்பனையில் கணிசமான விழுக்காடு ஏற்பட்டதும் ஒரு காரணமாகும். மக்களிடையே இனந்தெரியாத பலவிதமான நோய்கள்

இருப்பினும் யார் மாறியென்ன விவசாயிகளின் வாழ்க்கையில் விடியலில்லை என்னும் போது சோர்ந்து விடுகின்றார்கள் என்று இந்த தேசம் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் காலம் வரும்போது அவர்களிலும் மாற்றங்களை நாம் உணர்ந்து கொள்ளலாம். அந்த வகையில் இந்த வருட சித்திரை புத்தாண்டு நல்ல பல செய்திகளை கொண்டுவரும் என எதிர்பார்ப்போமாக. உழைப்பின் ஊதியம் அந்த மக்களுக்கு கிடைக்கும் போது உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும். வடபுலத்தில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி பாரிய மாற்றங்களையும் வேலைவாய்ப்பினையும் கொடுக்கும் என எண்ணுகின்றோம்.

எமது பிரதேசம் பலவழிகளிலும் வளர்வதற்கும் அபிவிருத்தியடைவதற்கும் இயற்கையும் எல்லாம் வல்ல இறைவனும் கைகொடுப்பார்கள் என நம்புவோமாக.


நம்பிக்கைதானே வாழ்க்கை. இனங்களுக்கிடையில் ஒற்றுமையும், குழப்பம் விளைவிப்போர் தண்டிக்கப்படவும், மக்கள் அனைவருக்கும் அவர்கள் ஒவ்வொருவரும் எதிர்பார்க்கும் விடயங்களில் வெற்றிகள் கிட்டவும் பிரிந்த குடும்பங்கள் இணையவும், வாழ்வாதாரம் சிறக்கவும் விளம்பி வரங்கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஒற்றுமை



ஒரு வயல் வரப்பில் மூன்று கொக்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தன. எங்கு சென்றாலும், ஒற்றுமையுடன் சென்றன. இரை தேடச் சென்றாலும் கிடைத்த இரையை கூடி பகிர்ந்து உணவு உண்டு வாழ்ந்து வந்தன. இந்த ஒற்றுமை மற்ற விலங்கினத்துக்கும், பறவைகளுக்கும் பொறாமையாக கூட இருந்தது.

நரி ஒன்று, அந்த மூன்று கொக்குகளையும் பிரித்தே தீருவேன் என்று சபதமிட்டபடி களம் இறங்கியது.ஒரு நாள் மூன்று கொக்குகளும் வயல் வரப்பில் இரை தேடிக்கொண்டிருந்தன. நரி தன் சூழ்ச்சியை பயன்படுத்த திட்டமிட்டது.

அதன்படி முதலில் மூன்று கொக்குகளிடமும் நட்பை ஏற்படுத்திக் கொண்டது. சிறிது நாட்கள் சென்ற பிறகு, தனிமையில் இருந்த ஒரு கொக்கிடம் சென்றது. "கொக்கு நண்பரே! இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள், அவலட்சணத்தின் ஒட்டு மொத்த உருவமாக திகழும் உங்கள் நண்பர் கொக்குகளுடன் எப்படி நட்பு பாராட்ட முடிகிறது? உங்கள் அழகுக்கும் அந்தஸ்துக்கும் இது ஏற்ற காரியமா?" கேட்டது.

இதனை கேட்ட கொக்கிற்கு நரி சொன்னது உண்மையோ என்ற சந்தேகம் ஏற்பட, "என்ன செய்வது! எல்லாம் என் நேரம்" என்றது. வந்த காரியம் முடிந்த திருப்தியில் உடனே நரி அவ்விடம் விட்டு சென்றது. நரி இப்போது இரண்டாவது கொக்கிடம் சென்றது. "கொக்கு நண்பரே எப்படி உள்ளீர்?" வினாவியது நரி.

"நலம் நரி நண்பரே", என்று பதிலுக்கு கூறியது கொக்கு. இரண்டாவது கொக்கிடம் இப்போது தன் சூழ்ச்சியை தொடங்கியது நரி. "கொக்கு நண்பரே! நீர் எவ்வளவு அறிவு உடையவர். எந்த குளத்தில் எவ்வளவு மீன்கள் உள்ளன என்பதை உம் அறிவால் கண்டுபிடித்து விடக் கூடியவர் நீர். அவ்வளவு அறிவு உடைய நீர் ஒன்றும் தெரியாத உங்கள் நண்பர் கொக்குகளுடன் நட்பு கொள்வதா?" என்று சூழ்ச்சியை கிளப்பிவிட்டது. நரி கூறிய வார்த்தைகளால், இரண்டாவது கொக்கிற்குள் சிந்தனை எட்டிப்பார்க்க நரி தான் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிப் போனது.

இதோடு நில்லாமல் மூன்றாவது கொக்கிடம் சென்றது நரி. வழியில் மூன்றாவது கொக்கிடம், "கொக்கு நண்பரே! நீங்கள் எவ்வளவு வீரம் படைத்தவர். இரை பிடிப்பதிலும்! பறப்பதிலும், எவ்வளவு வீரம் படைத்தவர். இவ்வளவு வீரம் உடைய ஒன்றுக்கும் உதவாத உமது மற்ற 2 நண்பர் கொக்குகளுடன் சுற்றித்திரிந்ததில் உமது வீரமே உமக்கு மறந்திருக்குமே" என்று கொக்கிடம் கேட்டது.

நரியின் சூழ்ச்சியால் அந்த மூன்று கொக்குகளுக்குள் நாளடைவில் பகைமையும், யார் பெரியவன் என்ற சண்டையும் ஏற்பட்டது. ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக்கொண்டன. இதனால் ஒற்றுமையுடன் இருந்த மூன்று கொக்குகள் தனித்தனியே பிரிந்தன.

நடந்ததை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த கிளி ஒன்று, மூன்று கொக்குகளையும் சந்தித்து நரியின் சதித்திட்டத்தை சொல்லி முடித்தது. அடப்பாவி!' எங்கள் ஒற்றுமைக்கு உலை வைத்து விட்டானே! நல்ல நட்பை இழந்தோமே! என்று வருந்தின.

"முன்பின் தெரியாதவர் வந்து திடீரென தேவையில்லாமல் புகழ்ந்தால் அதற்கு மயங்கி விடக்கூடாது. அப்படி மயங்கும் பலவீனம் ஒருவருக்குள் இருந்தால் அவரை மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்திவிட முடியும். உங்கள் மூவர் விஷயத்தில் அதுதான் நடந்தது. இனியாவது இப்படி திடீர் புகழ்ச்சிக்கு மயங்காதீர்கள்' என்று அறிவுறுத்தியது கிளி அதற்கு பின் மூன்று கொக்குகளும் மறுபடியும் நட்புடன் இருந்து வந்தன.

**முற்றும்**

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2018 15

- 1450-பிரான்சின் போர்மிக்னி என்ற இடத்தில் ஆங்கிலேயரின் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்ததன் மூலம் வடக்கு பிரான்சில் ஆங்கிலேயரின் அதிகாரம் முடிவுக்கு வந்தது.
- 1755-சாமுவேல் ஜோன்சன் என்பவர் தனது ஆங்கில அகரமுதலியை வெளியிட்டார்.
- 1815-சல்லி என்றழைக்கப்பட்ட டச்சு செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகமானது.
- 1892- ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனம் உருவாக்கப்பட்டது.
- 1912-பனிப்பாறை ஒன்றுடன் மோதிய பிரித்தானியாவின் டைட்டானிக் பயணிகள் கப்பல் வட அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கியதில் 1503 பேர் பலியாயினர்.
- 1923-இன்சுலின் முதன் முதலாக நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பாவிக்கப்பட்டது.
- 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் நாசிகளின் பேர்ஜேன்-பெல்சன் வதை முகாம் பிரித்தானியப் படையினரால் விடுவிக்கப்பட்டது.
- 1997-மக்காவில் ஹஜ் பயணிகளின் முகாம் ஒன்றில் தீப்பற்றியதில் 341 பேர் கொல்லப்பட்டனர்.
- 1976-தமிழ்நாட்டில் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1452-லியொனார்டோ டாவின்சி, இத்தாலிய ஓவியர், சிற்பி, கட்டிடக் கலைஞர் (இ. 1519)
- 1469-குரு நானக், 1வது சீக்கிய குரு (இ. 1539)
- 1874-ஜொகன்னஸ் ஸ்டார்க், நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (இ. 1957)
- 1915-கா.கோவிந்தன், தமிழக அரசியல்வாதி, எழுத்தாளர் (இ. 1991)
- 1920-கிருஷ்ணா வைகுந்தவாசன், இலங்கைத் தமிழ் செயற்பாட்டாளர், அரசியல்வாதி (இ.2005)
- 1924-ம.கனகரத்தினம், இலங்கை அரசியல்வாதி (இ. 1980)
- 1931-தோமசு திரான்சிட்ரோமர், நோபல் பரிசு பெற்ற சுவீடிய்க் கவிஞர் (இ. 2015)
- 1940-ஜெஃப்ரி ஆர்ச்சர், ஆங்கிலேய எழுத்தாளர், அரசியல்வாதி

### இறப்புகள்

- 1765-மிகைல் இலமனோசொவ், ரஷ்ய வேதியியலாளர், இயற்பியலாளர் (பி. 1711)
- 1865-ஆபிரகாம் லிங்கன், அமெரிக்காவின் 16வது அரசுத்தலைவர் (பி.1809)
- 1872-ஒகஸ்டஸ் சீபே, செருமானிய-பிரித்தானிய பொறியியளாளர் (பி.1788)
- 1998-போல் போட், கம்போடியாவின் 29வது பிரதமர் (பி.1925)
- 2006-எஸ்.புண்ணியமூர்த்தி, இலங்கை வானொலி அறிவிப்பாளர்
- 2006-நாவண்ணன், ஈழத்துக் கவிஞர், ஓவியர், சிற்பி

### சிறப்பு நாள்

- பண்பாட்டிற்கான பன்னாட்டு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 75 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 40 | 50 | 80 | 40 |
| தக்காளி | 30 | 30 | 25 | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 40 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 40 | 40 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 80 | 100 | 160 | 60 |
| பூசணி | 40 | 20 | 30 | 30 | 40 | 60 |
| புடோல் | 60 | 60 | 35 | 50 | 80 | 70 |
| வாழைக்காய் | 50 | 60 | 35 | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 160 | 150 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 55 | 80 | 60 | 120 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 40 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 40 | 50 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | – | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 45 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 150 | 180 | 120 | 180 | 240 | 140 |
| பீற்றூட் | 30 | 40 | 30 | 30 | 60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 60 | 35 | 60 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 180 | 180 | 200 | 400 |
| போஞ்சி | 100 | 150 | – | 100 | 160 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 310 | – | – | 50 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 240 | 200 | 200 | 150 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 30-70 | 75 | 75 | 80 |
| இராசவள்ளி | 200 | 160 | 120 | 200 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 140 | – | – | 100 | – | – |
| முள்ளங்கி | 40 | – | 30 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 45 | 50 | 10 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 80 | – | – | 80 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுகுடி சொற்கேளாது.
சாகிறவன் மருந்து குடியான்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரி மீதான நம்பிக்கையீனங்கள் வளர்கின்றன

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தருவார் என்பது அவர் மீதான முதல் நம்பிக்கை.

அதனைத் தொடர்ந்து காணாமல்போனவர்களின் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகள் என எல்லாவற்றுக்கும் தீர்வு பெற்றுத் தருவார் என்பது ஏனைய நம்பிக்கைகள்.

எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முதல் இங்கு குறிப்பிடப்பட்ட எந்தப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்வு பெற்றுத் தரவில்லை.

ஒரு நாட்டின் ஜனாதிபதி நினைத்த மாத்திரத்தில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தந்துவிட முடியாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நன் முயற்சிகளுக்கு பேரினவாதிகளும் முன்னைய ஆட்சியாளர்களும் குந்தகம் செய்வர் என்ற உண்மை நிலையை தமிழ் மக்கள் உணர்ந்திருந்ததனால்,

ஜனாதிபதி மைத்திரிக்கு தீர்வைத் தருவதற்குக் கால அவகாசம் தேவை என்று தமிழ் மக்கள் உளப்பூர்வமாக நினைத்திருந்தனர்.

ஆனால் காலம் கடந்து போகிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் குறுகிக்கொண்டு வருகிறது.

இருந்தும் தமிழ் மக்கள் எதிர்பார்த்த நம்பிக்கைகள் தளர்வுற்று அவர் மீதான நம்பிக்கையீனங்களே வளரத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை தோற்றுப் போகுமாயின், அந்த நம்பிக்கை அவநம்பிக்கையாக மாறுமாயின் இலங்கையில் இனி எவர் ஆட்சியில் இருந்தாலும் அவரை நம்புதல் என்பது தமிழ் மக்களிடம் ஒருபோதும் சாத்தியப்படமாட்டாது என்பதை சத்தியம் செய்து சொல்ல முடியும்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்து அதனை நிறைவேற்றுவதென்பது ஒட்டுமொத்தச் சிங்கள மக்களினதும் தலையாய கடமையாகும்.

விடுதலைப் போராட்டம் முடிவுற்ற பின்னர் தமிழ் மக்களிடம் சிங்கள மக்கள் எதிர்பார்க்கக்கூடிய ஒரே ஒரு விடயம் தனித் தமிழீழம் என்ற கோரிக்கையை கைவிடுதல் என்பதாகவே இருக்க முடியும்.

தனி நாட்டுக் கோரிக்கையை கைவிடுவதற்காக தமிழ் மக்களுக்கு அவர்கள் கேட்கின்ற அதிகாரத்தையும் உரிமையையும் வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் சிங்கள மக்கள் கூறியிருக்க வேண்டும்.

ஆனால் இவை எதுவும் நடக்காமல் தமிழ் மக்களுக்கு உரிமையோ, அதிகாரமோ வழங்க முடியாது என்பதாக தென்பகுதியின் ஒரு தரப்பினர் திமிறுகின்றனர். இது அவ்வளவு நல்லதல்ல. இன்று தமிழ் மக்கள் நலிவுற்றுப்போகலாம். ஆனால் என்றோ ஒரு நாள் தமிழ் மக்கள் பலம் பெறலாம். இவை சொல்லி நடப்பதல்ல.

ஆகையால் தமிழ் மக்கள் ஜனாதிபதி மைத்திரி மீது கொண்ட நம்பிக்கையைப் பாதுகாப்பதில்தான் இலங்கைத் திருநாட்டின் மாங்கனி வடிவம் மாற்றமுறாமல் இருந்து கொள்ளும்.

# தங்களது சுயகௌரவம் தொடர்பில் சுதந்திரக் கட்சி கவனம் செலுத்த வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி

பிரதமருக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்களது சுயகௌரவம் குறித்து கட்சி கவனம் செலுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி விடுத்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதா? என்பது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து விலக வேண்டும் என்பதே தங்களது நிலைப்பாடாகும்.

பிரதமர் மீது நம்பிக்கையில்லை என்று நாடாளுமன்றில் வாக்கெடுப்பில் ஈடுபட்ட சுதந்திர கட்சியினர் தேசிய அரசாங்கத்தில் தொடர்வது ஏற்புடைய விடயமல்ல.

அத்துடன் தங்களது சுயகௌரவம் தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கவனம் செலுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். (ம)

# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமருடன் விரைவில் சந்திப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அரசாங்கத் தரப்புத் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இருவரும் இங்கிலாந்து செல்கின்றனர்.

இதன்போது அவர்கள் பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்திக்கவுள்ள நிலையில், அவர்களுக்கு இடையிலும் சந்திப்பொன்று நடைபெற வாய்ப்பிருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரிதானிய பிரதமர் தெரேசா மேயுடன எதிர்வரும் 19ஆம் திகதி சந்திப்பை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

கல்கிஸ பிரதேசத்திற்குட்பட்ட வர்த்தக நிலையம் ஒன்றில் மின்சாரம்தாக்கியதில் ஒருவர் பலியாகியுள்ளார்.

22 வயதுடைய இளைஞனே இவ்வாறு பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

இளைஞரின் சடலம் கலுபோவில் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார விசாரணைகளை முனனெடுத்து வருகின்றனர். (ம)

# தமிழ் - சிங்கள மக்கள் புத்தாண்டு பாரம்பரியத்தை கடைப்பிடிப்பது அவசியம்

## கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ

புத்தாண்டு பாரம்பரியத்தை உரிய முறையில் தமிழ - சிங்கள மக்கள் நிறைவேற்ற வேண்டும்.

இது மக்களிடத்தில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்குமென, கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு காலத்தில் புண்ணிய நேரத்தில் மத வழிபாடுகளில் ஈடுபடுவது முக்கியமானதாகும்.

புத்தாண்டு உதயமாகும் பொழுது உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஓய்வை பெற்றுக் கொள்வதே இதன் விஞ்ஞான ரீதியிலான அடிப்படையாகும் என அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மற்றும் எமது நாட்டில் விவசாயம் மற்றும் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இதனால் புத்தாண்டு காலத்தில் சுபவேளையில் பணிகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமானதாகும் எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ம)

# இலங்கை போக்குவரத்துச் சபைக்கு புத்தாண்டு காலத்தில் அதிக இலாபம்

புத்தாண்டு காலத்தில் இலங்கை போக்குவரத்து சபை அதிகளவில் இலாபம் ஈட்டியுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை நாளொன்றுக்கு 78 மில்லியன் ரூபாய் வீதம் இலாபம் ஈட்டியுள்ளதாக போக்குவரத்து சபையின் தலைவர் ரமல் சிறிவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மக்களின் நலன்கருதி இன்றைய தினமும் விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அனைத்து நகரங்களுக்கும்பஸ்சேவைகள்முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின தலைவர் எம்.பி.பி. ஹேமச்சந்திர தெரிவித்தார்.

பிரதேச மட்டத்திலும் பஸ் சேவைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இன்றைய தினம் விசேட ரயில் சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொழும்பில் இருந்து பண்டாரவளை நோக்கி இன்று காலை 7.30 மணிக்கு விசேட ரயில் சேவை இடம்பெறவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

மாத்தறையில் இருந்து மருதானை வரை இன்று இரவு 7 மணிக்கு ரயிலொன்று பயணத்தை ஆரம் பிக்கவுள்ளதுடன், மருதானையில் இருந்து மாத்தறை வரை இன்று மாலை 2.55 க்கு பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரை இன்று இரவு 8 மணிக்கு மற்றுமொரு ரயில் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

அத்துடன், பண்டிகைக் காலததை முன்னிட்டு தெற்கு அதிவேக வீதியிலும் விசேட பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வாஸ்து சாந்தி, பிரவேச பலி ஆகியவற்றுக்கு விளக்கம் என்ன?**

கட்டடம் கட்டிய மேஸ்திரிக்கு துணி கொடுத்து மாலையிடவும் அரிவாளை அவரிடம் கொடுத்து பூசணிக்காயை எட்டுத் துண்டுகளாக வெட்டி குங்குமம் வைத்து தனியே ஒரு தட்டில் வைத்துக் கொள்ளவும்.

வாஸ்து பொம்மையை மேஸ்திரியைக் கொண்டு அரிவாளால் மூன்று முறை வெட்டி வேள்வித் தீயை வைக்கோல் பொம்மையில் வைக்கவும். வாஸ்து சக்கரத்தில் அப்பொம்மையை வைத்து மூன்று முறை தரையில் தேய்த்துவிட்டு வீட்டைச் சுற்றி இழுத்துச் சென்று தென்மேற்கு பகுதியில் எரித்துவிடவேண்டும்.

கலச நீர்கொண்டு வாஸ்து பொம்மையை இழுத்துச் சென்ற இடமெல்லாம் தெளிக்கவும்.

பிரவேச பலி: எட்டுத் துண்டுகளாக நறுக்கிய பூசணிக்காயை எடுத்துக்கொண்டு கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என திசைகளுக்குரிய மந்திரத்தை சொல்லி பலியிடவும். கலச நீரை வீட்டு உரிமையாளர் மீது தெளிக்கவும். (தொடரும்)

## மீண்டும் ஒரு யுத்தம் வேண்டாம்

### இராணுவத் தளபதி

(கொழும்பு)

மீண்டும் ஒரு யுத்தம் வேண்டாம் என்கிற முக்கியத்துவம் வாய்ந்த செய்தியை உங்கள் இளைய தலைமுறையினருக்கு கற்பித்து கொடுத்து அவர்களை நற்பிரஜைகளாக வளர்த்தெடுங்கள் என இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தமிழ - சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு இவர் நேற்று முன்தினம் விடுத்த வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "மீண்டும் ஒரு யுத்தம் வரக் கூடாது என்று எல்லோரையும்போலவே நாமும பெருவிருப்பம் கொண்டிருக்கின்றோம். அதற்காகவே அர்ப்பணிப்புடன் செயறபட்டுக் கொண்டிருக்கின்றோம் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவீந்திரன் சகலதுறையிலும் அசத்தல் சிவகௌரி விளையாட்டுக்கழகம் சம்பியன்



புதுவருட தினத்தை முன்னிட்டு சிவகௌரி விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்து சுற்றுப்போட்டியில் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் காரை சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தைஎதிர்கொண்ட ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 10 பந்து பரிமாற்றம் நிறைவில் 94 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய காரை சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் 9 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக காரை சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ரவீந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ரவீந்திரன் 55 ஓட்டங்களையும் பந்து வீச்சில் 3 இலக்குகளையும் கைப்பற்றினார். (க)

# நவஜீவனை வெற்றி கொண்டு அரையிறுதியில் குறிஞ்சிக்குமரன்



டான் ரி.வி நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டத் தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின. இப் போட்டியில் 01:00 என்ற கோல்கணக்கில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி பெற்று அரை இறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது. (க)

# கொலின்ஸ் வெற்றிக்கிண்ணம் மகேசன் அணிவசமானது



கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்திய 8 பேர் கொண்ட 6 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கிண்ணத்தை சுவீகரித்தது கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழக அணி. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மகேசன் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி மூன்று விக்கெட் இழப்பிற்கு 76 ஓட்டங்கள் பெற்றது.

நிரோஜன் 22 ஓட்டங்களையும் அனுரதன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சது 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பதிலுக்கு துடுப்பெடுத்து அல்வாய் இளைஞர்கள் விளையாட்டுக் கழக அணி 53 ஓட்டங்களை பெற்றது. அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து பந்து வீச்சில் பிரசாத் மற்றும் அனுரதன் ஆகியோர் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக பிரசாத்தும் தொடர் ஆட்ட நாயகனாக அனுரதனும் தெரிவு செய்யப் பட்டனர். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் ஸ்கந்தாஸ்ரார் அணி வெற்றி




கே.சி.சி.சி வெற்றிக் கிண்ண வெள்ளி விழா தொடரின் 4 ஆவது போட்டி 7.04. 2018 அன்று பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது ஸ்கந்தாஸ்ரார் அணி, ஹாட்லியைற்ஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 26.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்ற னர். சாகித்தியன்-14, மணி மாறன்-33, சதீஸ்-13, பிரசாந்-16, பிரதீப்-28, புருசோத்மன்-17 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஸ்கந்தாஸ்ரார் அணிசார்பாக புருசோ த்மன், சோபிதன், தரணிதரன், அஜின் தலா ஒரு இலக்கி னையும் துவாரகன்-2 பிரசான் -3 இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 14.5 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றனர்.

மிதுசாந்-28, சதீஸ்-60, துவாரகன்-28, அஜன்தன்-11, சயந்தன் ஆட்டமிழக்காது-10 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஹாட்லியைற்ஸ் அணி சார்பாக நிஷாந்தன்-04 இலக்குகளை கைப்பற்றினார்.


இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு (தரவரிசை பட்டியல்) ஸ்கந்தாஸ்ரார் அணி 6.02 புள்ளிகளையும் ஹாட் லியைற்ஸ் அணி 2.01 புள்ளி களையும் பெற்றுக் கொண்டது. (க)

# இளைஞர் மீள் எழுச்சியின் மரதனோட்ட முடிவுகள்



கொல்லங்கலட்டி இளைஞர் மீளெழுச்சிக் கழகம் வருடப் பிறப்பினை முன்னிட்டு நடத்தும் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான மரதன் ஓட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இவ் மரதனோட்ட நிகழ்வில் முதலாவது இடத்தினை ஜெசிந்தனும் இரண்டாவது இடத்தினை தர்ஷிகனும் மூன்றாவது இடத்தினை கண்ணனும் பெற்றுக் கொண்டனர். (க)

# ரிக்கெட் கொடுத்ததற்கு பிராவோவிற்கு நன்றி



சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திர வீரரான பிராவோவிற்கு பிரபல நடிகை டிக்கெட் வாங்கிக் கொடுத்தற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்று வரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல் தொடரின் முதல் போட்டி கடந்த 7 ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சென்னை அணியின் சகல துறை வீரர் டுவைன் பிராவோ 30 பந்துகளுக்கு 68 ஓட்டங்கள் குவித்து சென்னை அணியின் வெற்றிக்கு பெரிதும் உதவினார்.

இந்நிலையில் பிரபல பாலிவுட் நடிகையான நாடசா தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பிராவோவுக்கு நன்றி கூறியுள்ளார்.

ஐ.பிஎல்தொடரில் என்னுடைய நண்பர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்கு வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.

மும்பை அணிக்கெதிரான போட்டியின் போது அவனது ஆட்டம் மிகவும் அற்புதமாக இருந்தது என அவர் பதிவிட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தையின் வருகை...

ங்கீதாவும் அண்மையில் ஜனாதிபதி மைத்திரியை சந்தித்து, தமது தந்தையை விடுவிக்குமாறு கோரினார். ஜனாதிபதியும் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அதனைத் தொடர்ந்து புதுவருடத்தில் தமது தந்தை தம்மை வந்தடைவாரென எதிர்பார்த்ததாகவும் எனினும் தமது எதிர்பார்ப்பு ஏமாற்றமளித்துள்ளதாகவும் அவரது பிள்ளைகள் தெரிவித்துள்ளனர்.

தமது தாயும் உயிருடன் இல்லாத காரணத்தால், தாம் அரவணைப்பின்றி இந்த புத்தாண்டில் வேதனையில் தவிப்பதாக ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆனந்த சுதாகரனுக்கு கடந்த வருடம் ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனந்த சுதாகரனின் மனைவி நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் 15ஆம் திகதி உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து நிர்க்கதியாகிய இரு பிள்ளைகளும், தமது தந்தைக்காக ஜனாதிபதி, வடக்கு ஆளுநர் என பல்வேறு உயர்மட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

எனினும், ஆனந்த சுதாகரன் விடுவிக்கப்படாததால் இப்பிள்ளைகள் மன ரீதியாக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் நிலை கண்டு வேதனைப்படுவதாக பிள்ளைகளின் அம்மம்மா கூறுகின்றார். (ம)

## தமிழர்கள் பண்பாடு...

இன்றைய சூழ்நிலையில் தமிழர்களின் வாழ்வும் பண்பாடும் சிகரங்களை நோக்கி செல்கின்றதா, சிரமங்களை நோக்கி செல்கின்றதா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தப்பட்டது.

இந்தப் பட்டிமன்றத்தில் பங்கேற்ற பிரபல பெண் பேச்சாளர் பர்வின் சுல்தானா, தமிழர் தம் பண்பாட்டு, கலாசார விழுமியங்களை போற்றிப் புகழ்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளை உதாரணம் காட்டியுள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் 30 இராணுவப் படையினர் பயணம் செய்த பஸ் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தமாகியிருந்த வேளையில் அந்த வழியில் சிங்கள மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வந்ததாகவும், மாணவர்கள் குண்டுத் தாக்குதலில் இறந்து விடக்கூடாது என விடுதலைப் புலி போராளி தான் அந்த வெடியில் சிக்கி உயிரைத் தியாகம் செய்ததாகவும், பர்வின் சுல்தானா தனது பட்டிமன்றப் பேச்சில் சுட்டிக்காட்டியிருந்தார்.

பிரபல இந்திய செய்மதி தொலைக்காட்சி ஒன்றில் நேற்று இந்த நிகழ்ச்சி ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விடுதலைப் புலிகளின்...

பதுங்குகுழியை புலனாய்வுப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளனர். இந்த பதுங்கு குழி முழு அளவில் அகழ்ந்து எடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2004-ம் ஆண்டு இந்த பதுங்குகுழி நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம் எனவும் 2007 ஆம் ஆண்டு வரையில் பிரபாகரன் இந்த பதுங்குகுழியில் தங்கியிருந்திருக்க வேண்டுமெனவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

குறித்த பதுங்கு குழியில் பாரியளவில் வானூர்திகளை தாக்கியழிக்கும் ஏவுகணைகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## அச்சுறுத்தல்களுக்கு...

வது புதுவருடம் இதுவாகும். இந்நிலையில், தமக்கு இன்னும் ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்காமை மிகுந்த வேதனையை தருவதாக, கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சனி தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்கள் உயிருடன் இருப்பதற்கான ஆதாரங்கள் உண்டு எனத் தெரிவித்த அவர், அவர்களுக்கு என்ன நடந்ததென கூறவேண்டிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்திற்கு உண்டு எனத் தெரிவித்தார்.

இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேசம் கொடுக்க வேண்டுமென்றும் தெருவிலுள்ள தாய்மாரின் கண்ணீரை துடைத்து விடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு, தமது பிள்ளையை கடந்த 2018ஆம் ஆண்டு இராணுவம் பிடித்துச் சென்றதாகவும், இதுவரை எவ்வித தகவலும் இல்லையென்றும் வயதான தந்தையொருவர் குறிப்பிட்டார்.

நோய்வாய்ப்பட்டுள்ள தான், வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் இப்போராட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் தமது பிள்ளைகளை ஒப்படைத்தால் போதும் என்றும் கவலை வெளியிட்டார். (ம)

## சதம் கண்ட...

ளார். 5 பிள்ளைகளின் தாயாரான இவர் கிளிநொச்சி கோணாவில் பகுதியில் மகளுடன் வாழ்ந்து வருகின்றார்

நேற்று தனது 100ஆவது பிறந்தநாளை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டபிள்ளைகள் என மகிழ்வுடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

தான் இந்த அளவு வயதுவரை இருப்பதற்கு சிறந்த உணவுகளை அந்நாட்களில் உண்டமையாலேயே வாழ்ந்ததாக குறித்த தாயார் குறிப்பிடுகின்றார்.

இவரது மூத்த மகள் 80 வயதில் இந்தியாவில் வாழ்ந்து வருவதாக இவரது மகன் தெரிவித்தார். (ம-315)

## சிறிலங்கா சுதந்திர...

ளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

கட்சியிலிருந்து விலகிய சிலர் உண்மையை மறந்த விதத்தில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். ஜனாதிபதி இவற்றுக்கெல்லாம் சிறந்த முறையில் விரைவில் பதிலளிப்பார் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவி விலகிய 16 பேரும் ஸ்ரீ ல.சு.க கட்டாயம் அரசாங்கத்திலிருந்து விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் மக்களை...

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பொது அணியில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

சீனாவுடனான நட்பால், இந்தியா-இலங்கை இடையிலான ராஜதந்திர உறவுகள் முன்பு போல் இல்லை.

இந்தியா போன்ற வெளிநாடுகளில் அகதிகளாக உள்ளவர்களை மீண்டும் அழைத்துவர பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறினார்.

இலங்கையின் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக தமிழ் மக்களுக்கான தேவைகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இந்தியா உட்பட வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கை ஏதிலிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம)

# 2020ஆம் ஆண்டளவில் அனைத்து மக்களுக்கும் ஈ-ஹெல்த் அட்டை

(கொழும்பு)

2020ம் ஆண்டளவில் அனைத்து மக்களுக்கும் ஈ-ஹெல்த் அட்டை வழங்கப்படும் என்று சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அனைத்து நபர்களினதும் சுகாதார அறிக்கை இதில் உள்ளடக்கப்படும். ஒருவரின் இரத்த வகை உள்ளிட்டவை இதில் குறிப்பிடப்படும். இதனால் சிகிச்சையின் போது துரிதமாக சிகிச்சையை மேற்கொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈ-ஹெல்த் அட்டை உலக சுகாதார தினத்தன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதுதொடர்பான நிகழ்வு கடந்த ஏழாம் திகதி கொழும்பு நெலும்பொக்கன என்ற தாமரை தடாக கலையரங்கில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வறுமையில் வாழும் எங்களை காட்டு யானைகளும் விட்டு வைக்கவில்லை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் குடும்பங்களை காட்டு யானைகளும் விட்டுவைக்கவில்லை என 55 வயதுடைய பெ.நாகம்மா தெரிவிக்கின்றார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இவரின் தற்காலிக கொட்டிலை யானை தாக்கி அழித்துள்ளது. அதில் இருந்து உயிர் தப்பிய இவர் ஊரவரின் உதவியுடன் தற்காலிக கொட்டிலை சரிசெய்து வாழ்ந்து வந்துள்ளதுடன் இது தொடர்பில் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும், இதுவரை எதுவித இழப்பீடுகளோ அல்லது தற்காலிக வீட்டினை திருத்தி கொடுக்காத நிலையில், தான் வாழ்ந்து வருவதாக தெரிவித்தார். அவரது ஒரு கை முறிந்த நிலையில் கட்டுபோட்டு காணப்படும் நிலையில் 11.04.2018 அன்று மீண்டும் அவரது காணிக்குள் புகுந்த யானைகள் பலாமரத்தில் உள்ள பலா காய்களை அழித்துள்ளதுடன் பலா, மா மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது. இரண்டு தென்னைமரங்களை நிலத்தில் வீழ்த்தி சாய்த்துள்ளது. தேங்காய் விற்கும விலையில் தனது சொத்தாக இருந்த மூன்று தென்னைகளில் இரண்டை அடியோடு புரட்டிவிட்டது. யானைத் தொல்லை தாங்க முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாக தனது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளார். (ம-281)

### கோரளைப்பற்று வடக்குப் பிரதேச சபை உறுப்பினருக்கு

# சொந்தமான படகு, வலைகள் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கோரளைப்பற்று வடக்குப் பிரதேச சபை உறுப்பினருக்கு சொந்தமான கடல் மீன்பிடிப்படகு மற்றும் வலைகள் என்பன அடையாளம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் வாகரை, பனிச்சன் கேணி கடற்கரையில் நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் தீக்கிரையான படகு மற்றும் வலைகள் என்பன கோரளைப்பற்று வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமத்தம்பி சந்திரமோகன் என்பவருக்குச் சொந்தமானது என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சம்பவம் தொடர்பில் வாகரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் க.சந்திரமோகன் கருத்து தெரிவிக்கையில்,

நேற்று அதிகாலை கடற்கரையில் எனது படகு மற்றும் வலைகள் எரிவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நான் அப்பகுதிக்குச் சென்றவேளை எனது படகு, வலைகள் முற்றுமுழுதாக தீக்கிரையாகி இருந்தது.

இதன் பெறுமதி சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமாகும். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நான் போட்டியிட்டு வட்டாரத்தில் வெற்றி பெற்று தற்போது வாகரைப் பிரதேச சபையின் உறுப்பினராக இருக்கின்றேன்.

கோரளைப்பற்று, வடக்குப் பிரதேச சபையில் முதல் நாள் அமர்வில் தவிசாளர் தெரிவிற்காக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினருக்கு ஆதரவு தரும்படி என்னிடம் கோரினார்கள். அவர்கள் தவிசாளராகவும், முஸ்லிம் உறுப்பினர் ஒருவரை பிரதித் தவிசாளராகவும் நியமிப்பதற்கு இருந்தனர்.

அது எனக்குப் பிடிக்கவில்லை. எனது தலைமையின் கட்டளையின் பிரகாரம் நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எனது ஆதரவை வழங்கினேன்.

அதன் பிற்பாடு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினரால் பல்வேறு விதத்தில் அச்சுறுத்தப்பட்டேன். அதன் விளைவாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என நான் சந்தேகப்படுகின்றேன்.

இது தொடர்பில் வாகரைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். இது தொடர்பான குற்றவாளியைக் கண்டுபிடித்து அவர்களுக்கு தண்டனை வழங்குவதோடு, எனது எரியுண்ட படகு மற்றும் வலைகளுக்கான நட்டஈட்டையும் பெற்றுத் தர வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (ம)

# நாடு முழுவதும் தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய வைபவங்கள் நாளை

(கொழும்பு)

புத்தாண்டு பிறப்பின் தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய வைபவ நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10.16 இற்கு நடைபெறவுள்ளது.

இம்முறை இந்த தேசிய நிகழ்வு அத்தனகல்ல ரஜமஹா விகாரையில் நடைபெறவுள்ளது. இதில் சபாநாயகர் கரு ஜயசூரிய பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவும் இதில் பங்கு கொள்ளவுள்ளார். சுகாதாரம், போஷாக்கு, சுதேச வைத்தியதுறை அமைச்சு, ஆயுர்வேத அமைச்சும் இணைந்து தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. இந்த வைபவத்திற்கு அமைவாக நாடு முழுவதிலும் தலைக்கு எண்ணெய் வைக்கும் வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம)

### அம்பாந்தோட்டை விபத்தில் ஒருவர் பலி

# மோட்டார் வாகனத்தை எரித்த பிரதேசவாசிகள்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை பகுதியில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதையை கடக்க முற்பட்ட போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

தங்கல்ல, அகுனுகொலபெலஸ்ஸ பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில்

அகுனுகொலபெலஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் வாகன சாரதி தப்பிச்செல்ல முற்பட்டபோது பிரதேசவாசிகள் துரத்தி பிடித்து மோட்டார் வாகனத்தை தீயிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மித்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி இன்று...

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு எதிர்வரும் 16 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை லண்டன் நகரில் இடம்பெறவுள்ளதுடன் பொதுவான எதிர்காலம் எனும் தொனிப்பொருளில் இம்முறை மாநாடு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கவுள்ளதுடன் இதன்போது பல நாடுகளின் அரச தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ம)

## சித்திரை புத்தாண்...

இணைந்து புத்தாண்டை சிறப்பாக வரவேற்ற மைத்திரி. பாரம்பரிய முறையில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதோடு. நீலப் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டுள்ளார்.

மைத்திரியின் மனைவி ஜயந்தி சிறிசேன மற்றும் மகள் சந்துரிக்கா சிறிசேன உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒரு சேர ஒரே வண்ணத்தில் ஆடைகளை அணிந்து புதுவருடக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை கண்கொள்ளாக் காட்சிகளாக அமைந்துள்ளன. .

புத்தாண்டை முன்னிட்டு சுப வேளையில் பணிகளைத் தொடங்கும் சம்பிரதாயத்திற்கு அமைய ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்ல வளாகத்தில் வில்வமரக் கன்று ஒன்றை நட்டதன் பின்னர், கை விசேட சம்பிரதாய நிகழ்விலும் ஜனாதிபதி ஈடுபட்டார்.

மேலும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், நாட்டிய நாடகங்களும் இதன்போது இடம்பெற்றதுடன் ப தரப்பு கலைஞர்கள் உட்பட அமைச்சர்களு பொதுமக்களும் இந்த கொண்டாட்டத்தில் ந்து கொண்டு ஜனாதிபதிக்கு வாழ்த் ளைத் தெரிவித்திருந்தனர்.

இல்லத்தை நோக்கி படையெடுத்து திருந்த விருந்தினர்களை பாரம்பரியத்தோடு வரவேற்ற மைத்திரி. அவர்களுக்கு விரு பசாரங்களை வழங்கி வைத்துள்ளார்.

நிகழ்வுகளின் போது நாட்டு மக்களுச் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி புத்தாண்டில் நேர்மறையா எண்ணங்கள் மற்றும் சிறந்த சிந்தனைகளு டன் அனைத்து வகையான பேதங்களையு மறந்து ஒரே நாட்டு மக்களாக தாய்நாட்டை கட்டியெழுப்புவதற்கு நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் அனைவரும் அணிசே வேண்டும் என தன் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வெகு விமர்சையாக நேற்று தனது இல்லத்தில் புதுவருட கொண் டாட்டங்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விடுவிக்கப்பட்ட...

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து 683 ஏக்கர் காணிகள் மக்களின் மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்ட நிலையில் அங்கு மரங்கள் மற்றும் தளபாடங்களைத் திருடும் சம்பவங்கள் இடம்பெற் வருகின்றன. அதனால் எச்சரிக்கை பதாகைகளை மக்கள் விடுத்துள்ளனர்.

வலிகாமம் வடக்கில் மக்களின் காண கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட பி னர் இரும்பு வியாபாரிகள் மற்றுமீ மரங்க வீட்டு தளபாடங்களை களவாடும் நபர் மக்களின் காணிகளுக்குள் புகுந்து தி வருகின்றனர்." நேற்று முன்தினம் விடுவிக் கப்பட்ட மயிலிட்டி பகுதியில் மரங்களை கள வாடும் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன.

இதனையடுத்து மயிலிட்டி மக்கள் திருட களுக்கு எச்சரிக்கை விடுத்து நேற்று சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். (ம)


### விற்பனைக்கு

புதிய மற்றும் பாவித்த Laptops, Iphone (5S,6) விலை 15,000/= - 40,000/=

தொடர்பு: 0777172325

(3635)

### விற்பனைக்கு

வட்டக்கச்சியில் வீடு,வயல், பயன் தரும் தென்னைமரங்களுடன் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு இல:
140, கட்சன்வீதிச்சந்தி, வட்டக்கச்சி, கிளிநொச்சி. 077 381 5426
(வட்டக்கச்சி மத்திய கல்லூரிக்கு அருகாமையில்)

(கி-2239)

### CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

(கி-2214)

### பிரத்தியேக வகுப்பு

A/L பொறியியல் தொழில்நுட்பவியல் பாடமானது பல்துறை பட்டப் பொறியியலாளரினால் (Charted Engineer) பிரத்தியேகமாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும். (3626)

தொடர்பு: 0752087288

### English Speaking Club

Want to speak/ improve in English!! Join the English speaking club! For graduates, O/L, A/L Students, House wives & Employees!
*Initial Seminar* Date: 18th April, 10.00 to 11.30 am
Or 04.30 to 06.00 pm. Further club meetings will be decided.

At Northern Technical Institute.
YMCA Building 107 2/1 Kandy Rd. Jaffna.
Contact : 0776505580 / 0768525406

(3623)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1982)

### கடை வாடகைக்கு விடப்படும்

முகவரி: வைத்தியசாலை/ குழந்தையேசு கோவில் முன்பாக பிரதான வீதி புதுக்குடியிருப்பு.
கடை நீளம் - 43 அடி, அகலம் - 35 அடி
முன்விராந்தை 6 அடி இணைந்த Bathrooms இரண்டு (7அடி நீளம், 3 1/2 அடி அகலம்) மாபிள் பதிக்கப்பட்டது.
இக்கடை தனியார் வைத்தியசாலை, பாா்மசி, தனியார் வங்கி ஏனைய அனைத்து நிறுவனங்களுக்கும் பொருத்தமானது.

தொடர்பு: 0774195963, 0779073319

(C-2237)

### அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு, உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

021 221 5656   070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

(C-2212)

### HIKVISION's GOLDEN PARTNER

SST சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்

2 வருட உத்தரவாதம்!



நியாயமான விலையில் உயர்தரத்துடன் உங்கள் தேவைக்கமைய நேர்த்தியுடன் பொருத்திக்கொடுக்கப்படும்

விற்பனைக்கு மட்டும்!

4 Cameras + DVR + Harddisk + PowerSupply 10Amp + BNCs + DCs + 50m 3c2v + Powercable = 25,500 Only!!!

ஒழுங்குபடுத்தப்பட்ட பாராமரிப்பு சேவையுடன்

SST SUN SAKTHY TRADERS (PVT) LIMITED
<<We will do it>>

இல.: 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொடர்புக்கு.: 0212217994/ 0775527099
இணையம்.: sunsakthy.com மின்னஞ்சல்.: info@sunsakthy.com

(3633)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org